KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.
V7. No.42. 25.10.1934.

m211, N28KN
N34.7.42.
199192

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஹு அக்டோபர் மீ 25உ [No. 42

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 657

2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன் தூதுப் படலம். 659

3. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 661

4. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A., B.L. 665

5. வீடுமென்.
K. T. விஜயராகவாச்சாரியார் B. A. 666

6. சம்பந்தர் காலத்திய தமிழ் மங்கையர்.
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 668

7. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 670

8. வர்த்தமானம் 672

க லா நி ல ய ம்

எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் 10.

இல்வாழ்க்கையின் மாண்பினை யினிதுணர்ந்து அதனிடத்தேதான் தமது பிறவிப்பயனையும் உயிர் வாழ்க்கையின் பொருளையுங் காண்கின்ற வில் ரோன்ட், தமது குடும்பத்தை நடத்துவதைக்காட்டிலும் பெரியதோர் காரியத்தில் ஈடுபட்டு அதற்குத் தம்மை முறைசெய்துகொண்டிருக்கின்றா ரென்று தம்மைச் சொல்லிக்கொள்வதற்கு இயலவில்லையே என இரங்குவார்போலச் சில சொற்கள் இயம்பியிருக்கின்றார். இது மிகை; அவர்கையில் ஒரு திருக்குறள் புத்தகம் இல்லாமையே குறை. இருக்குமாயின், "இயல்பினானில்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாந் தலை" என்னும் அம் மெய்மொழி அவர்கண்களிற்பட்டிருக்கும். அதுதானுமன்றி, "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவது எவன்" என்று திருவள்ளுவர் கேட்கின்ற கேள்வியால் இவர்மனம் வேறொன்றிற்கும் அவாவ நேர்ந்திருக்காது. ஆயினும், இப்படி மனமானது மேன்மேலும் ஒருவரை முறைசெய்துகொள்ளும்படி தூண்டுவ தத்தனையும் தூய்மையுடைய தோற்றங்களே.

இனி, ஒன்று கருதுதல்வேண்டும். பெற்றோர் மனைவி மக்கள் உடன்பிறந்தார் என்று இருப்பவர் இனிது வாழுமாறு தான் வாழவேண்டுமென்னும் அது இயற்கைத் தூண்டல்களின் ஒன்று. இயற்கையாகிய இவ்வுறவின் உணர்ச்சியின் தன்மையையும் அதனை வளர்க்கும் வழிகளையும் அதனால் விளையும் நன்மைகளையும் நாம் 'கல்சரை'ப்பற்றி எழுதியுள்ள தலையங்கங்களில் விளக்கியிருக்கின்றோமாதலின், மீண்டுமிங்கு அவைகளைவிரித்துரைக்க நினைக்கவில்லை. இது இல்லாவிடத்துச் செயற்கையாகச் சேர்த்துக்கொள்கின்ற "அபிமானங்களெல்லாம்" அவலமாய ஆரவாரங்களேயல்லாமல் வேறாக முடிதல் அருமை. தன் குடும்பத்தினர் போன்று எல்லாரும் எங்கும் இன்புற்றிருக்க விழைகின்ற விழைவே உண்மையான இதயத்தின் ஊன்றுகோல் ஆதல்வேண்டும். அப்பொழுதுதான் இந்நோக்கம் இயற்கையினின்று பெருகிய பெருக்கம் ஆகும். அப்பொழுதுதான் அவ்விழைவின் காட்சி முழுமையடைகின்றது. இவ் வியற்கையம்சத்தின் மென்மையையுந் தூய்மையையும் நன்கு உணர்ந்த நம் வில் ரோன்ட், மகவின் நகைமுகங் கண்டு தன்னையே மறந்த தன்மையளாய் எதிர்நகுகின்ற வொரு தாயானவள் வேறுயாவரினும் அதிகமான தத்துவம்மிகுந்தவளாகும் மெய்ம்மையை அத்துணை அழகுறத் தலைப்பில் வைத்துப் பேசலுற்றார்.

இவ்வுலகத்தில், ஒரு குழந்தையும் அதன் அன்னையும் எதிர்நோக்கி முகமலர்ந்து கண்கனியக் காண்கிறபோது அந்தக் காட்சியைவிட அழகானதும் இன்பம் மிக்கதும் தூய்மைவாய்ந்ததும் வேறொன்று இல்லை. இவ்விருவர்க்கிடையில் மிகமிக மெல்லியவொரு நல்லிசை யெழலாகின்றது. ஆயினும் அந்த இசையைக் கேட்பதற்கோ மிகவும் நுட்பமான செவிகள் வேண்

டும். அந்த இசைக்கு இணங்கியே ஈசுவரன் அங்கு வந்து நர்த்தனம் செய்கின்றான். அந் நர்த்தனத்தைக் காணப்பெறுதற்குக் கண்களும் மிகவும் கனிந்திருத்தல்வேண்டும். இவ்வாறு தாம் கற்றகல்வியின் நலத்தினராயிருப்பவராதலின் வில் ரோன்ட், அவ் வன்னையும் மகவும் அன்போடமைந்த காட்சியில், முழுமையோடு கலந்துகொள்கின்றவொரு மேன்மையைக் காணலாகின்றார். முழுமையின் மெய்ம்மையை இன்னவாறு கண்டபிறகு இனி எத்துணைதான் முயன்றாரேனும் அம்முழுமுதல் மெய்ப்பொருளை மறுத்தலோ இத்திறத்தினோரா லியல்வதொன்றன்று. இதுதான் ஆன்மானுபவம்; இதுதான் தெய்வானுபவமுமாம். வேறொன்றும் இல்லாவிடத்தும் இவ்வனுபவங்களினின்று அவரவர் தம் வாழ்க்கைக்கு வேண்டிய ஆதாரங்களைப் பெற்றுக்கொளலாம் என்று வில் ரோன்ட் முன்னர்க் கூறினர். அக்கூற்றின் உண்மையை இம் முழுமையின் மெய்ம்மையினுள் காணல்வேண்டும். புலமை சான்றபாசுரங்களின் நினைவே போதிய ஒருவருக்கு வேறோர் புகலும் வேண்டுமோ! பண்ணார்ந்த பாடலைச் செவியுற மாந்துந்தோறும் பெருகிப் பொலிகின்ற உணர்வும் அக்கடவுளையே தழுவிக்கொள்கின்ற வாழ்க்கையைத் தந்து அளிக்கின்றது. கடவுளை ஒவ்விக்கொண்ட ஜான் ஹேய்ன்ஸ் ஹோம்ஸ், "இன்னிசைக் கீதங்கள் என் செவியையெட்ட அதனைப் பாடியோனது உள்ளத்தின் உவகையை நான் உணர்கின்ற அவ்வொரு நொடியில் யான் வாழ்கின்றேன் என்னும் வாய்மை தலைநிமிர்ந்தெழுகின்றது" என்று கூறுவதற்கும், கடவுள் ஒன்று உண்டென்று கொள்ளவோ தன்னால் இயலவில்லையேஎன்று பரிகின்ற இவ் வில் ரோன்ட், "பண்ணமைந்த பாடல்கள் என்வாழ்விற்கு ஆதாரமாயமையும்" என்பதற்கும் வேற்றுமை காணலரிது.

இனி, கடவுளைப்பற்றியும் சமயப்பற்றைப் பற்றியும் வில் ரோன்ட் தம்முடைய கருத்தைத் தெரிவிக்கின்றார். அவ்வுரைகளை நாம், இங்குமுன் சொல்லியிருப்பவைகளைக்கொண்டு நன்குசோதிக்கவேண்டும். நாஸ்திகர்போல்அவர் தன்னைப்பாவித்துக்கொண்டு பேசினாலும், உண்மையில் அவர் நாஸ்திகர் அல்லர். ஸ்வின்பர்ன், ஷெல்லி, கீட்ஸ், ஜான் கூபர் பாய்ஸ், எட்வின் ஆர்லிங்டன் ராபின்ஸன், சார்லஸ் எ. பியர்ட், அனையவருக்கு இணையேயான கவிதாஇதயம் வாய்த்தவர் இந்த வில் ரோன்ட். மற்று, அவர்களே போல், வாயினால் மறுத்தாலும் உள்ளத்தால் மெய்ம் முதற்பொருளின் உண்மையையே போற்றுகின்றார். இத்தகைய பெரியோரும் உள்ளொன்று வைத்துப் புறமொன்றுபேசுவதன் செவ்விய இரகசியத்தையும் அழகையும் இதனிற் காணலாம். நம் தாயுமானவரேயென்ன இவரும், "இரும்புநேர் நெஞ்சகக் கள்வனேயானாலும் நின்னை இறைவிட்டு நின்றதுண்டோ" என்னப் பகராமற்பகரும் இவர் மொழிகளை இனிக் கேட்போம்:—

"சமயப்பற்று எனக்கு எவ்வகை உதவிசெய்கின்றதென்பதே மிகவும் கடினமான கேள்வி. மதப்பற்று என்னும் அப்பெயரினால், எத்தனை மூடத்தனம் எத்தனை துவேஷம் எத்தனை கொடுமை பாமர சனங்களினிடையே பிரசாரம் செய்யப்படுகின்றதென்பதை நான் அறிகின்றேன். இந்தப் பாமரஜனங்கள், தங்கள்மதநம்பிக்கைகளை, என்னைப்போன்றவர் கண்டுபிடித்துக்கூறும் உண்மைகளினின்று எவ்வளவு ஆர்வமுடன் காப்பாற்றி, அந்நம்பிக்கையைக் கெடுக்கமுயல்கின்றவர்களென எம்மைப் பாவித்து எத்துணைப் பகைப்பார்கள் என்பது மறிவேன்; ஆயினும் என் இதயம் அவர்களை அன்புடன்தழுவிக்கொள்கிறது. சரியானவொரு விஷயத்தைத் தப்பானகாலத்திலும் தப்பான இடத்திலும் சொல்லிக் கெடுக்கின்றநாஸ்திகக் கல்வியாளனைவிட இப் பாமர ஜனங்கள் எத்தனையோ மடங்கு நம்மால் விரும்பத் தகுந்தவர் என்பதிற் சந்தேகமில்லை. இத்தகைய ஜனங்களின் நம்பிக்கையைக் கெடுக்கமுயல்வது அறிவும் கருணையும் அற்றவொரு மனத்தின் காரியமாம்.

ஆயினும், உயிர் நூல் முடிவுகளுக்கெல்லாமாறாக, மனித ஆன்மா நிரந்தரமானதே யென்றேனும், சரித்திர வரன்முறைக்கு மாறாக, கடவுள் என்று மனிதரால் குறித்துக்காட்டியவொன்று உளதென்றேனும் நம்புவதற்கோ என்னால் இயலவில்லை. எனினும் ஒன்று; முற்றிலுமே இறுகிவிட்ட இக்காலத்தவர்களில் சிலர் மனங்களைப்போல்அல்லாமல், ஆன்மநினைவும் கடவுள்நம்பிக்கையும் என்வாழ்க்கைக்கு ஊன்றுகோல்களாய் அமைய இயலாமைபற்றியே வருந்துகின்றேன்; எனது இளமைப்பருவத்திற்கு இந்நம்பிக்கைகள்செய்தளித்திருந்த காவியம்அன்ன வோர் அழகினையும் முற்றிலும் மறந்துவிட்டேனல்லேன். மனிதனைப் போலவும் ஒருமேலான பரம்பொருள் இருக்கக்கூடும்என்கின்ற எண்ணம்எல்லாவற்றிலும்மிக்க அசட்டுத்தனமுடையதாய் எனக்குத் தோன்றுகிறது. எனினும், மகிழ்ச்சிக்கிடமாகிய இப்பேதைமையை மெய்யே என்று என்னை யாவரேனும் நம்பவைப்பாராயின், அவருக்கு நான் நன்றி மிக உடையவனாக இருப்பேன். 'நான்'என்னும் அத்தத்துவம் நித்தியமாக அழியாதிருத்தல் வேண்டும் என்னும் ஆசையானது ஒருவகையில் சுயநயப்பேராசைபோன்றே எனக்குத்தோன்றுகின்றது. நான்நான் எனநினைத்திருக்கின்ற இவைகள் கணக்கின்றிக் கூட்டங்கூடித் திணறுகிற அவ்விண்ணுலகவாசம் எனக்கு வெறுக்கத்தக்கதாகவே இருக்கும். ஆயினும், நானும் இவ்வுயிரை நீத்துப்போவதற்கு வருந்துபவனாகியும், போயபின், என் மக்களுக்கும் நண்பர்களுக்கும் யாதுநேர்கின்றதென்பதை அறிய விரும்புகின்றவனாகியும் இருப்பேன் என்றே நினைக்கின்றேன்.

இன்னபடி, பழைய நம்பிக்கைகளின் கொள்கைகள் இப்பொழுதெனக்கு ஆதாரமாகமாட்டாமல்போய்விட்ட போதிலும், அவை தம் நினைவென்னும் ஒருநறுமணத்தை என்னுள்ளத்தே நிறுத்திவிட்டுத்தான் நீங்கியிருக்கின்றன. எல்லா உயிர்வாழ்க்கையும் ஒரு வெறும் எந்திரச் சூழ்ச்சியே என்று இக்காலத்தவர்களில் பலர் எண்ணுகின்ற அம் முரட்டு எண்ணத்தை நான் ஏற்றுக்கொள்ளாதபடி அப்பழைய நினைவுகளே என்னை இன்னமும் காத்திருக்கின்றன. பழைய நம்பிக்கைகளில் உள்ள, மேலான நோக்கங்களின் உருவகஉண்மைகள் பலவற்றைக் காணக்கூடியவனாகவே இன்னமும் நான் இருப்பது அந்நினைவுகளினாற்றான். ஒருகால், தமக்குச் செவிகொடுக்கும்படி இடைவிடாமல் மன்றாடிக்கொண்டிருக்கின்ற அந்நம்பிக்கைகள், என் சந்தேகங்களை உடைத்தெறிந்து, நானும், G. K. செஸ்டர்டன் முதலிய பலரே போல், அந்நம்பிக்கைகளை ஏற்றுக்கொண்டு பழையநெறியைப் புதிதுபுகுந்து மாறினவனாயினும் ஆகலாம். நான் வயது [illegible] எழுதுகின்றேனென்பதைஎனதுவாசகர்கள்கவனித்துக்கொண்டிருக்க வேண்டும். (இப்பொழுது வில்ரோன்டிற்கு வயதுநாற்பத்தெட்டு).

நாமனைவரும் ஒரு பெரியஜீவனின் தனித்தனி பாகங்களென்றும், பாகங்களின் அழிவே முழுமையின் ஜீவனென்றும், தனித்தனி மனிதர்களாக நாம் இறந்தொழிகின்றோமானாலும், நாம் இருந்ததாலும் செய்தவைகளாலும் அம்முழுமையான துவேறுபாடுஅடைந்துவிடுகின்றதென்றும், கொள்கின்ற வகையில்தான் 'மனிதன் நித்தியமானவன்' என்னும் அச்சொல் எனக்குப்பொருள்படுகின்றது. இங்கு இருந்து வாழ்ந்து இயங்குகின்றஎல்லாவுயிர்க்கும் எல்லாச் சக்திகளுக்கும் பிறப்பிடமாகிய ஒரு மூலகாரணமும்; நமது முயற்சிகளின் நோக்கங்களின் குறிக்கோளாகி, இன்னும் எய்தாவிட்டாலும் எதிர்பார்க்கப்படுகின்றவொரு செம்மைநிலையாய் நிற்கின்ற முடிவுக்காரணமும் ஆகிய இதுவேதான் எனக்குக் கடவுள்என்னும் கருத்தாகி அமைகிறது. ஒருகால், எல்லாக் காலங்களிலும் மகாத்மாக்கள் ஆராதித்த அம் மகத்தான முழுமையே நாளைய மதத்தில் கடவுள் என்று அழைக்கப்படலாம் போலும்."

தாம் மற்றவர்களைக் கேட்ட கேள்விகளுக்குத் தாமே தம்முடைய கருத்துக்களை இவ்வண்ணம் விடையாக அளித்திருக்கின்றார் வில்ரோன்ட். நாளை கடவுளென்று அழைக்கப்படலாம் என்று இவர் எதிர்பார்க்கும் அத்தத்துவமுழுமையை இவ்விந்தியர் நேற்றே ஆராதித்தும் இருக்கின்றனர்என்பதை வில்ரோன்ட் அறிந்துகொள்ள முயன்றிருப்பாராயின், அவர்தம் சந்தேகங்களெல்லாந்தகர்ந்து, இன்னமும் முதியோராகுமுன்னரே, மாறியும் இருப்பார். கடவுளை நம்புவோர் நம்புகின்றபடி அந்தக்கடவுள் இல்லையென்று மறுக்கமுயல்கின்ற வன்மையினும் நம்ப நினைக்கின்ற ஆசையே இவர்பால் அதிகம் உளது. உலகநூல்களேயன்றி அலகுசால் கற்பின் அறிவுநூல்களும் இவர் சாலக் கற்றுளராதலின் அவைதாம்இவருக்கு இங்கு இவ்வண்ணம் கைதந்து உதவுகின்றன.

தமிழ்ப்பாடம் 142.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[645-வது பக்கத் தொடர்ச்சி]

என்றிவன் புகன்ற மாற்ற
மிருசெவி வெதுப்பக் கேட்டு
நின்றுளம் பதைப்ப வாடி
நெட்டுயிர்ப் போடுஞ் சோரு
மன்றலங் குழலி னுடன்
மதர்நெடுங் கயற்க ணாலி
குன்றெனப் பணைத்து வீங்குங்
குவிமுலை வார்ந்த வன்றே. 72.

உரை:—என்று - என்று, இவன் - இந்த நளன், புகன்ற மாற்றம் - அன்னவாறு சொன்ன அவ்வார்த்தைகளை, இருசெவி - தன் இரண்டு காதுகளையும், வெதுப்ப - கொதிக்கச்செய்யும்படி, கேட்டுநின்று - கேட்டு, உளம் - தன் மனமானது, பதைப்ப - பதைக்கும்படி, வாடி - வாட்டமடைந்து, நெட்டுயிர்ப்போடும்- பெருமூச்சுவிட்டவளாய், சோரும்-சோர்கின்ற, மன்றல் - வாசனைபொருந்திய, அம் - அழகிய, குழலினாள் தன்- கூந்தலையுடைய தமயந்தியின், மதர்-மதர்த்த, நெடும் - பெரிய, கயல் கண்- கயல்போன்ற கண்களிலிருந்து வருகிற, ஆலி-நீர்த்துளிகள், குன்றென - மலையைப்போல், பணைத்து - பெருத்து, வீங்கும் - பூரிக்கின்ற, குவிமுலை - குவிந்த முலைகளின்மேல், வார்ந்த - ஒழுகின—(அன்றே - அசை).

விரிவுரை:—தான் வைத்திருந்த காதலையெல்லாம் இன்னவாறு நளன் பிறர்கை காட்டிக்கொடுத்துவிட்டானே யென்று அலமந்து அழுகின்றாள் பேதையித் தமயந்தி. வாடினாள், சோர்ந்தாள், சூழ்கின்ற நெடுந்துயரால் பெருமூச்சு விடுகின்றாள். களகளவென அவள் கயற்கண் ஆலிகள் உதிர்கின்றன. மேகமென அவள் கண்கள் பொழிந்தனவெனின் அம்மழையை மலையென அவள்முலைகள் ஏந்தின. இமையவர்க்குத் தூதனென வருவானோ இக்காதலன்.........இந்த விபரிதச் செய்திக்கு ஏதோ ஒரு காரணம் இருத்தல் வேண்டும்.........தன்பால் காதலின்மையால் இஃதவன் கழறினனல்லன் என்று ஊகிக்குந் திறமை அம் மடவாளுக்கில்லை. இந்நிலையில் நின்றதமந்தியைப் புகழேந்திப்புலவர்,

உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போல்-பிள்ளை
புள்ளரிக்கு நாடன் றிருமடந்தை பூவாளி [மீன்
உள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர்.

என்று நளவெண்பாவில் வருணித்திருக்கின்ற செய்யுள் நம் வாசகர்களது நினைவினில் இருக்கலாம். ஓடுமீன் ஓட உருமீன் வருமளவும் வாடியிருக்குமொரு வஞ்சனையால் பேர்பெற்ற கொக்கும், பிள்ளைமீன்களைக் கொத்திவிடுகிற விதர்ப்பநாட்டரசன் மகள் அத்தமயந்தி என்றதால், வஞ்சனையற்ற அவள் மடமை காட்டப்பெற்ற அழகை அங்குக் கண்டோம்.

குறிப்பு:—வார்ந்த, என்பது இங்குப் பெயரெச்சமன்று—பலவின்பால் வினைமுற்று. வார்ந்தன என்னுமுருவத்தில் சாதாரணமாய் இது வழங்கப்பெறும்.

மாதுகண் பனிப்ப நோக்கித்
தோழியர் மாழாந் துள்ளம்
பேதுற வெய்தி நின்ற
பெய்வளைத் துயர மெல்லாந்
தூதுநாம் விடுத்த வன்னஞ்
சொல்லிய தென்னிற் சற்று
மாதர மின்றி யிவ்வா
றுரைக்குமோ வரச னென்றார். 73.

உரை:—மாது-தமயந்தியானவள், கண் பனிப்ப - கண்ணீர்சொரிவதை, தோழியர்-தோழிமார், நோக்கி- பார்த்து, உள்ளம்- மனம், மாழாந்து- கலங்கி, "பேதுறவு-கலக்கத்தை, எய்தி நின்ற-அடைந்திருக்கின்ற இந்த, பெய்வளை - அணிந்திருக்கின்ற வளையல்களையுடைய தமயந்தியின், துயரம்எல்லாம்- காமவேதனைகளை யெல்லாம், நாம் தூது விடுத்த அன்னம் - நாம் தூதாக அனுப்பிய அவ்வன்னப்பறவை, சொல்லியது என்னின் - சொல்லியிருப்பது உண்மையானால், அர

m 211, N28k
N34.242
199192

சன்-இந்த நளன், சற்றும்-சிறிதும், ஆதரம் இன்றி-ஆசை இல்லாமல், இவ்வாறு - இன்னபடி, உரைக்குமோ - சொல்வானோ,'' என்றார் - என்று கூறினர்.

விரிவுரை:—காதலுக்குத் துரோகஞ் செய்வான் நளன் என்று கருதமாட்டாத தோழியர், அன்னத்தின் வாய்மையைத்தான் அயிர்க்கத் தலைப்படுகின்றனர். உற்றதை இனி அன்னமே முன்வந்து சொல்வதற்கு இஃது ஏற்றதோர் தோற்றுவா யாகின்றது.

குறிப்பு:—மாது + கண் = மாதுகண்:—இது எழுவாய்த்தொட ராகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. அல்லது, இதனை மாதினுடைய கண் என விரியவல்ல ஆறும் வேற்றுமைத் தொகையாய்க் கொண்டாலும், நிலைமொழி உயர்திணையாகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை என்று உணரவேண்டும் (   )

கண் + பனிப்ப = கண்பனிப்ப:—இதற்கு விதி இன்னுங் கூறவில்லை.

பனிப்ப + நோக்கி = பனிப்ப நோக்கி:—வருமொழி முதலி லிருப்பது மெல்லின மெய்யாதலால் அது நிலைமொழியீற்று உயிரோடு யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தது (   )

நோக்கி + தோழியர் = நோக்கித் தோழியர்:-இது வினையெச்சத்தொட ராகையால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது (   )

தோழியர் + மாழாந்து = தோழியர் மாழாந்து:—நிலைமொழியீற்றில் ரகரமெய்யிருப்பினும், வருமொழி முதலில் வந்திருப்பது மெல்லினமெய்யாதலால் அவை யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தன (   )

மாழாந்து + உள்ளம் = மாழாந் துள்ளம்:— வருமொழி முதலுயிர், நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டுநின்ற மெய்யின்மேல் ஏறிப் புணர்ந்தது (   )

உள்ளம் + பேதுறவு = உள்ளம் பேதுறவு:— ஆறும் வேற்றுமைத் தொகை, மற்ற வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள், பண்புத்தொகை, உவமத்தொகை, ஆகிய இத்தொடர்களில் வருமொழிமுதலில் உயிர், அல்லது வல்லின மெய், அல்லது மெல்லினமெய், அல்லது இடையின மெய், ஆகிய இவைகளில் எதுவரினும் நிலைமொழியீற்று மகரமெய் கெடும் என்றும்; மற்றத் தொடர்களில், வருமொழி முதலில் இடையின மெய்யும் உயிரும் வந்தால் நிலைமொழியீற்று மகர மெய் கெடாதென்றும்; மெல்லினமெய் வருமொழியின் முதலில் வந்தால் கெடும் என்றும்; வல்லினமெய் வருமொழிமுதலில் வருமாயின் அந்நான்குதவிர ஏனையதொடர்களில் நிலைமொழியீற்றுமகரமெய் கெடாமல் அவ்வல்லெழுத்திற்கு இனமான மெல்லெழுத்தாய்த் திரியும் என்றும் முன்னர்க் கூறினோம். வருமொழி முதலில் வரக்கூடிய வல்லின மெய்களினுள் பகரமெய் வருமானல் யாதாகும் என்பது சிறிதிங்குக் கவனிக்கத்தக்கது. படம் + பார்த்தேன் = படம்பார்த்தேன், மனம் + புழுங்கியது—மனம்புழுங்கியது, ஓடும் + பிள்ளை = ஓடும்பிள்ளை, என வேற்றுமைத்தொகை, எழுவாய்த் தொடர், பெயரெச்சத் தொடர் முதலிய தொடர்களில் நிலைமொழியீற்று மகர மெய் வருமொழிமுதல்பகரமெய்யோடு புணரும் போது அவ்வெழுத்துக்கள் யாதும் விகாரமின்றி இயல்பாய் நிற்கின்றன. எனினும், படம் + கண்டேன் = படங்கண்டேன், நிலம் சேர்ந்தான் = நிலஞ்சேர்ந்தான், குதிக்கும் + தவளை = குதிக்குந் தவளை என, மற்ற வல்லினமெய்கள் வருமொழி முதலில் வருமானல் நிலைமொழியீற்று மகரமெய் அவைகளுக்கு இனமான ஙகர ஞகர நகர மெய்களாகத் திரிவதுபோல், பகரம்வரினும் நிலைமொழியீற்றுமகரமெய் அப்பகரத்திற்கு இனமான மகர மெய்யாய்த் திரிந்து நிற்கிறது என்னவுங் கூறலாம். இதன்படியே, உள்ளம் + பேதுறவு = உள்ளம் பேதுறவு என்று இயல்பாய்ப் புணர்ந்ததென்றேனும், அல்லது, நிலைமொழி யீற்றில், புணர்ந்தபின் நிற்கும் மகரமெய் முன்னிருந்தமகரமெய்யின்றிப் பகரத்திற் கினமாய்த் திரிந்தாகிய மெய்யென்றேனுங் கொள்ளல்கூடும். பகரத்திற்கு இனமெல்லெழுத்து மகரமே யாதலால், நிலைமொழியீற்றுமகர மெய் தானேயாய்த் திரிந்து நிற்கின்றதெனக் கூறுவது இயல்வதாகின்றது.

பேதுறவு + எய்தி = பேதுறவெய்தி:- வகரமெய்யின் மேல்ஏறிய நிலைமொழியீற்றுமுற்றியலுகரங்கெட வருமொழி முதலுயிர், நின்ற மெய்யின்மேலேறியது. (   ).

எய்தி + நின்ற = எய்திநின்ற:—வருமொழி முதலில் இருப்பது மெல்லின மெய்யாதலால், நிலைமொழியீற்றுஉயிரோடுயாதும் விகாரமின்றிப் புணர்ந்தது (   ).

நின்ற பெய்வளை = நின்றபெய்வளை.—பெயரெச்சத் தொடராகையால் வருமொழிமுதல்வல்லினமெய் மிகவில்லை. (   ).

பெய் + வளை = பெய்வளை:—நிலைமொழிவருமொழிகளை நோக்குமளவில் இது வினைத்தொகையாயிருந்து, 'உடைய தமயந்தி' என்றசொற்களும் அதன் இறுதியிலும் தொக்கு இருத்தலால் இது, வினைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை (   ). இத்தொடரை ஒருசொல்லாகப் பாவிக்க வேண்டும்.

பெய்வளை + துயரம் = பெய்வளைத் துயரம் :—இது ஆறும் வேற்றுமைத் தொகை. நிலைமொழியாகக் கருதவேண்டிய 'பெய்வளை' என்னும் இத்தொடர் பொருளால் உயர்திணையாயினும் 'வளை' என்னும் அஃறிணைச்சொல்லமைந்திருப்பதால் ஆறும்வேற்றுமையிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தது.

துயரம் + எல்லாம் = துயரமெல்லாம் :—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழி முதலுயிர் ஏறியது. (   )

எல்லாம் + தூது = எல்லாந்தூது :— இரண்டாம் வேற்றுமைத் தொகையாகையால் வருமொழிமுதலில் வல்லினமெய் வர நிலைமொழியீற்றுமகரமெய் அவ்வல்லினமெய்க்கு இனமான மெல்லினமெய்யாய்த் திரிந்தது (   )

தூது + நாம் = தூதுநாம்:— நிலைமொழியீற்று உயிரோடு வருமொழிமுதல் மெல்லினமெய்யானது இயல்பாய்ப் புணர்ந்தது (   )

நாம் + விடுத்த = நாம்விடுத்த:-எழுவாய்த் தொடராதலால் வருமொழி முதலில் இடையினமெய் வர நிலைமொழியீற்று மகரமெய் கெடவில்லை. (   ).

மேலும், நிலைமொழி நாம் யாம் அனைய சொற்களாயிருக்குமாயின் எத்தொடரினும் அவ்வீற்று மகர மெய் கெடாது. (   ).

விடுத்த + அன்னம் = விடுத்தவன்னம்:—நிலைமொழியீற்றில் அகர உயிர் இருப்பதால் வருமொழி முதலில் உயிர் வர, வகர உடம்படுமெய் பெற்றது. (   ).

அன்னம் + சொல்லியது = அன்னஞ் சொல்லியது:- எழுவாய்த்தொட ராகையால் நிலைமொழி யீற்று மகரமெய், வருமொழி முதலிலுள்ள ச் என்னும் வல்லினமெய்க்கு இனமான ஞ் என்னும் மெல்லின மெய்யாய்த் திரிந்தது. (   ).

சொல்லியது + என்னின் = சொல்லிய தென்னின்:- நிலைமொழி யீற்றுக் குற்றியலுகரங் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (   ).

என்னின் + சற்றும் = என்னிற் சற்றும்:-இன்னும் விதி கூறவில்லை.

சற்றும் + ஆதரம் = சற்றுமாதரம்:— நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (   ).

ஆதரம் + இன்றி = ஆதரமின்றி :—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (   ).

இன்றி + இவ்வாறு = இன்றியிவ்வாறு:-நிலைமொழியிறுதியில் இகர உயிர் இருப்பதால் வருமொழி முதலில் உயிர்வர யகர உடம்படுமெய் பெற்றது. (   ).

இவ்வாறு + உரைக்குமோ = இவ்வாறுரைக்குமோ:- நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது (   ).

உரைக்குமோ + அரசன் = உரைக்குமோ வரசன்:— நிலைமொழி யீற்றில் ஓகார உயிர் நிற்பதால், வருமொழி முதலில் உயிர்வர வகர உடம்படுமெய் பெற்றது (   ).

அரசன் + என்றார் = அரசனென்றார்:—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுத லுயிர் ஏறியது (   ).

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[648-வது பக்கத் தொடர்ச்சி]

ஆட்செய் யருமையு மாட்கோள் ளுரிமையும்.

இராமனுக்குத் தான் இயம்பற்குரியவைகளை இயம்பியபின் வாலி சுக்கிரீவனுக்கு உரைத்த உறுதிமொழிகளைக் கம்பர் இனி ஏழு பாசுரங்களில் எடுத்துக் கூறுகின்றார்—

என்றவற் கியம்பிப் பின்ன
ரிருந்தன னிளவ றன்னை
வன்றனைத் தடக்கை நீட்டி
வாங்கினன் றழுவி மைந்த
ஒன்றுனக் குரைப்ப துண்டா
லுறுதியஃ துணர்ந்து கோடி
குன்றினு முயர்ந்த தோளாய்
வருந்தலை யென்று கூறும்

[என்று இராமனுக்குக் கூறிப் பிறகு அங்கிருந்த தம்பியைத் தனது வலிமைவாய்ந்த இரண்டு பெரிய கைகளையும்நீட்டித் தன்பக்கல்சேர்த்துத்தழுவிக்கொண்டு,"மைந்தனே,உனக்கு நான் சொல்லவேண்டிய நன்மைதரத்தக்க வார்த்தை ஒன்று உளது; அதனை உணர்ந்துகொள். மலையினும் உயர்ந்த தோள்களையுடையவனே,வருந்தாதே— என்று வாலி கூறுவான்]

இன்னவாறு வாலி முன்னர் வான்மீகத்திலும் சுக்கிரீவனுக்கு உறுதி கூறியுளன். முதலில் அதனைக் கேட்டல் நலம்:—

"சுக்கிரீவனே, நான்உனக்குச்செய்தகுற்றங்களை மனத்திற் கொள்ளற்க. அவற்றைநான் அறியாமையாலும் வினைவலியாலும் செய்தேன் என்று கொள்க. ஒரே காலத்தில் நாங்கள் இருவரும் தமையன் தம்பியாய்க் கூடியிருந்து இந்த இராச்சியத்தை அனுபவித்தற்கு எங்களுக்கு விதியில்லை யென்று எண்ணுகின்றேன். அன்றேல் இப்படிச் சம்பவிக்கவேண்டிய காரணமென்ன ? என்னை எமபுரஞ் சென்றவனாகப் பாவித்து நீ இன்றைக்கே இந்த இராச்சியத்தை வகித்துக்கொள். நான் இதோ எனது உயிரையும் அரசையும் பெரும்பாக்கியத்தையும் ஒப்பற்றபுகழையுந் துறக்கப்போகின்றேன். அரச, இந்தத் தசையில் நான் சொல்லுவனவற்றை, அவை செய்தற் கரியனவாயிருப்பினும், நீ செய்யவேண்டும். தரையில் விழுந்து கண்ணீர்விட்டழுகின்ற அங்கதனைப் பார். அவன் குழந்தை, கஷ்டமறியாதவன், இதுவரையும் செல்வத்தில் வளர்ந்து வந்தவன்,இனிமேலும் இன்பத்தை அனுபவிக்க வேண்டியவன். என் உயிரினுமினிய என் குழந்தையாகிய இவனை, யானிறந்ததன் பின், நீ அவன் குறைகளை முடித்து, உன் வயிற்றிற்பிறந்த உன்னுடைய சொந்தக்குழந்தைபோலப் பாவி. வாநரசிரேஷ்ட, இனி என்னைப்போல நீயே இவனுக்குத் தந்தையும், பாதுகாப்பவனும், வேண்டியவற்றைக் கொடுப்பவனும், வருந் தீங்குகளைத் தீர்க்கின்றவனும் ஆகின்றனை. தாரை குமாரனை இவ்விளைஞன் ஊக்கமும் வலிமையும் உடையவன், வீரத்தால் உன்னையொத்தவன், அரக்கர்களுடைய போரில் உனக்கு முன் நின்று போராண்மை செய்யத்தக்கவன். சுஷேணன் குமாரியாகிய தாரை நுட்பமான காரியங்களை ஆய்ந்தறிவதிலும் அபாய காலத்தில் புத்திசொல்லுவதிலும் வல்லவள். அவள் ஆராய்ந்து தெளிந்த விஷயம் ஒருகாலும் தவறுவதில்லை; ஆதலால் அவள் எந்தக்காரியத்தைச் செய்யச்சொல்லுகின்றாளோ அதை நீ சிறிதும் ஐயமின்றிச் செய். இராமருடைய வேலைகளை நீ சிறிதும் பின்னில்லாது செய்யவேண்டும். பின்னிற்பாயாயின் உனக்குப் பாபம் உண்டாகும்; அவர் கோபங்கொண்டு உன்னைத்தண்டிக்கவுங்கூடும். சுக்கிரீவ, என் கழுத்திலுள்ள இந்தத் திவ்விய பொன்மாலையை எடுத்துநீ அணிந்துகொள்; இதிலுள்ள லக்ஷ்மி நான் இறந்தாற் போய்விடுவாள்."

எவனும், எவ்வகை இறுதி யெய்துவோனும், அருகிருக்கும் தம்பிக்குச் சொல்வதற் கமைந்த சொற்களேயன்றி இவை, வாலியின் சிறப்புநிலைக்கே உரியவை எனத்தக்க வாசகங்கள் ஆகமாட்டா. மேலும், இவை அங்கதன்கதியைக் குறித்தே பகரப்பட்டவைகளாகத் தோன்றுகின்றன. தாரையை இவன் சிறிது புகழ்வதும் அவளது மொழிகளைத் தான் கேளாமல் விட்ட கழிவிரக்கத்தால் போலும். இவ்வளவுதான் அந்த வாலி தன்தம்பிக்கு உறுதிமொழிகள் உரைக்

கவல்லவனு யிருந்தனன். இறுதியில் தன் கழுத்திலிருந்த பொன்மாலையை எடுத்துச் சுக்கிரீவனுக்கு அளித்த அச்செய்கை யொன்றே வாலியின் பெருந்தகைமைக் குரியது. இந்தப் பொன்மாலை, முன் இலக்குவனால் சூட்டியனுப்பப்பட்ட கொடிமாலைக் கயலில் சுக்கிரீவனதுகழுத்தின்மீ தெவ்வண்ணம்பொலிந்ததோ நினைத்தல் அருமை. தன் தமையனைக் கொல்வித்தல் பொருட்டுத் தானொரு கொடிமாலை குறியாய்க் கொண்ட கழுத்துடையனாயினும், அவனை முன்னேபோலப் பின்னரும் சுக்கிரீவன் என்றே அழைக்கின்றது இவ்வுலகம். அன்ன கழுத்திற்கு அண்ணன் இறவாமுன் ஓர் பொன்மாலை சூட்டிச் செல்லும் வகையில் வான்மீகி முனிவர் வாலியின் பெருமையை இனிது காட்டுகின்றார். உண்மையில், இவ்வான்மீகிமுனிவர் வகுத்துவைத்த பாத்திரங்கள் அனைத்துமே தம் சொல்லாற்காட்டினும் செய்கையாலேயே உயர்வுறச் சிறந்து தோன்றுமொரு தன்மை வாய்ந்தன. ஆயினும், "சகோதர வாஞ்சையால் வாலி இவ்வாறு கூற, சுக்கிரீவன் சினந்தணிந்து மகிழ்ச்சி குன்றி, இராகு கௌவப்பட்ட சந்திரன்போல் ஒளியும் இழந்து, அவன் சொன்ன சொற்களை அங்கீகரித்து, அவன் கொடுத்த காஞ்சன மாலையைப் பெற்றுக்கொண்டான்" என்று வான்மீகிமுனிவர் தொடர்வதைக் கருதுங்கால், சுக்கிரீவன் சினந்தணிந்து தன் மைந்தன் அங்கதனைத் தீதின்றிக்காக்கும்பொருட்டுஒருசிறுகாணிக்கையாகவே வாலி அப்பொன்மாலையைத் தந்தனனோவென்ன மயங்கலாம். இதுகாறும் சுக்கிரீவன் சீற்றமுடன் நின்றிருந்ததே இதற்குக் காரணம்போலும். பொன்மாலை பெற்றதனினும், "சுக்கிரீவ, என் பிழைகளைப் பொறுத்துக்கொள்க; என் மடமையினால் வினையினால் நான் அவைகளைச் செய்தேன்" என்று வாலி தன் பிழையைக்கூறிப் பொறுமை இரந்ததற்கே சுக்கிரீவன் மனமிளகிச் சினந்தணிந்தனன் என்றெண்ணுவோம்.

இது வான்மீகம்: கம்பர்தம் நூலிலோ வாலி தனது பிழையென்று ஒன்றையும் பேசினானல்லன், பொன்னரிமாலையாதுந் தன் தம்பிக்குத் தந்தானும்அல்லன். உண்மையான உறுதி வாசகங்களே உற்றுரைத்தான். தானறிந்த தத்துவத்தைத் தம்பிக் குரைப்பதனினும் நன்கொடை வேறுண்டோ. கூறுவான்கொற்றவாலி-

மறைகளு முனிவர் யாரு
மலர்மிசை யயனு மற்றைத்
துறைகளின் முடிவுஞ் சொல்லுந்
துணிபொரு டுணிவிற் றாக்கி
யறைகழ லிராம னாகி
யறநெறி நிறுத்த வந்த
திறையொரு சங்கை யின்றி
யெண்ணுதி யெண்ண மிக்கோய்

[எண்ணத்தின் திறமை வாய்ந்தவனே, வேதங்களும், எல்லா முனிவர்களும், தாமரைமலரிலுள்ள பிரம்மனும், எல்லாச் சாஸ்திரங்களின் முடிவும், துணிந்துசொல்கின்றவொரு பரம்பொருளே, துண்டிக்கின்ற வில்லைக் கையிற்கொண்டு ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த இராமன்ஆகி, தருமமார்க்கத்தை நிலைநிறுத்தும்பொருட்டு வந்தது, என்பதைச் சிறிதேனும் சந்தேகமில்லாமல் எண்ணிக்கொள்]

என வாலி, இராமனே பரம்பொருளாகுந் தன்மையைக் கண்கொண்டு கண்டுளனாதலின் தானும் யாதும் சங்கையின்றிச் சுக்கிரீவனுக்குத் தெரிவிக்கின்றனன். ஆயினும், அந்தக் காட்சி சுக்கிரீவனுக்கு வாய்ந்திராதென்பதும் இவனுக்குத் தெரியும். ஆதலின் அச்சுக்கிரீவனது கண்ணிற்கெட்டிய தொன்றைத் தன் கூற்றிற்குச் சான்ருகக் கூறுதல் வேண்டுமெனக் கருதிய இம் மாபெரும் வாலி,

நிற்கின்ற செல்வம் வேண்டி
நெறிநின்ற பொருள்க ளெல்லாங்
கற்கின்ற விவன்ற னாமங்
கருதுவ விவனைக் கண்டாய்
பொற்குன்ற மனைய தோளாய்
பொதுநின்ற தலைமை நோக்கின்
எற்கொன்ற வலியே சாலு
மிதற்கொன்று மேது வேண்டா

[பொன்மலை போன்ற தோள்களை யுடையவனே, அழியாத முத்திச்செல்வத்தைப் பெறவேண்டி, அதற்குரிய மார்க்கங்களைக் கடைப்பிடித்த எல்லா வஸ்துக்களும் இவனுடைய திருநாமத்தை ஜபிக்கின்றன; நினைப்பதும் இவனையேதான், என்பதை உணர்வாய். (எனினும் இது என்னுடைய கண்களுக்கே இப்பொழுது இலக்காகிய காட்சி; அவ்வாறன்றி) அவன் இங்கு அனைவர்க்கும் பொதுவாகத் தன்னைக் காட்டிக்கொள்கின்ற வகையிலேயே அவனுடைய முதன்மையைக் காணவேண்டுமாயின்—என்னைக் கொன்ற அவ்வலியே அவன் இறைவன் என்பதற்குப் போதிய சாக்ஷியாகாதா! இதனைக்காட்டிலும்மேலான காரணம் யாதும் வேண்டுவதில்லையே]

என எடுத்துக்கூறினான். தன்மேம்பாட்டுரை யொன்றிதனினும் அருமையாய் உயர்வுபெற எவ்விடத்தும் பயிலப்பெற்றதில்லை. "என்னையே கொன்ருனெனின் இவன் மூவர்க்கும் முதல்வனும் மூலமே என்பதில் இனி இறையொரு சங்கைவேண்டா" என்னுங்கால், கொன்ற அந்தப் பரமனது வரம்பிலா ஆற்றலை வியப்பதோ அல்லது, அவ்வரம்பில் ஆற்றலுடைய பொருளே தன்னைக் கொல்லுதற்கு வருதல்வேண்டும் எனச் சாதிக்கின்றவொரு வீரனது ஆற்றல்மொழிக்கு வரம்பு காணமாட்டாமல் கொண்டாடுவதோ இரண்டுமறியாமலே ஊசலாடும் சிலர் உள்ளம். முதல்நாள் போர்தோற்று வறிதே மீண்ட இராவணன், "நாசம் வந் துற்றகாலை நல்லதோர் பகையைப் பெற்றேன்" என்று தன்னையே பாராட்டிக்கொண்டது தன்மேம்பாட்டுரையின் சிகரத்தை எட்டித்தொடுகின்றதெனினும், இராவணனைப் போலவே அவன் பெருமிதப் பேச்சும் வாலியின் வாலின் கோடிக்குக் காணுது.

அதுவும்அன்றி, தன்னைக்கொன்ற ஆற்றலேபோல் அச்செய்கையின் கருணையாலும் இராமனது பரத்துவத்தைத் தன் தம்பிக்கு அறிவுறுத்துமொரு நினைவு கொண்டு வாலி,

கைதவ மியற்றி யாண்டுங் கழிப்பருங் கணக்கி றீமை
வைகலும் புரிந்து ளாரும் வானுயர் நிலையை வள்ளல்
எய்தவர் பெறுவ ரென்ரு லிணையடி யிறைஞ்சி யேவல்
செய்தவர் பெறுவ தையா செப்பலாந் தன்மைத் தாமோ.

[அப்பா, வஞ்சனைகள் பலசெய்து எப்படியும்தீர்த்துக்கொள்ளமாட்டாத கணக்கிலாத் தீமைகளை நாள்தோறும் செய்துள்ளவர்களாயிருந்தாலும், இவ்வள்ளலால் அம்பெய்துகொல்லப்பட்டால் அவர் மிகவுயர்ந்த பதத்தைச்சேர்வர் என்ருல், இவனது பாதங்களிரண்டையும் வணங்கிக் குற்றேவல் செய்தவர் அம்முத்தியைப் பெறுவார்கள் என்பது சொல்லவேண்டிய வொன்றும் ஆகுமோ.]

எனத் தண்டாபூபிக நியாயத்தால் தன்கருத்தை வற்புறுத்த முயன்ருன். இராமபிரானது பரத்துவத்தை

உரைப்பதில் வாலிக்கிருந்தவூக்கத்தினளவு சுக்கிரீவனுக்கு அதனைக் கேட்பதாற் கிளர்ந்த பரிசு அவனது முகத்தில் தோன்றியதில்லைபோலும். தன் அண்ணன் ஆவிபோம் வேளைவாய் அலற்றுகின்ற இது அத்தனையும் உலகுவரம் பிகந்தவோர் உயர்வுநவிற்சியே என்னச் சுக்கிரீவன், எண்ணம் மிக்கவன் ஆதலின், தன் மனத்துள்ளே மதித்து, வாலியின்பால் ஒருகால் பரிவன்றி அவன்மொழிகளில் நம்பிக்கையோ அற்றவனாய் நின்றிருத்தலும், அவனது அன்னதோர் நிலையை வாலி கண்ணுற்றுத் தெரியப்பெற்றதுங் கூடும். தறிபீறி முன் இரணியனுக்கெதிர்நின்ற மானுடமடங்கலே இவ்விராமனுவான் என இராவணனுக்கு எடுத்துச் சாற்றி, அதனிற்குச் செவிகொடாத அத்தமையனைத் துறந்து இராமபிரானை அடைந்து சரண்புகுந்த வீடணனுக்கே "அருத்தியும் அரசின் மேற்றே" என்பது உண்மையாயின், இந்தவொரு சுக்கிரீவனு வேறு நினைவுகளைவிட்டு அவ் வாலியின் சொற்களைக் கொண்டு, வில்லேந்தி வந்த அவ்வறைகழல் வீரனை, மறைகளும் முனிவர் யாரும் மலர்மிசை அமர்ந்த அயனும் மற்றைத் துறைகளின் முடிவுஞ் சொல்லுந் துணிபொருளாகவே ஏற்றுக்கொள்ள இசைவான்! இராமபிரானைக் கடவுளாகக் கொண்ட களையொன்றும் தன் தம்பியினது முகத்தில் ஆடக் கண்டிலன் வாலி. வேறு எண்ணங்களால் தூர்ந்திருக்கும் மனத்தினன் இவன் என்பதை முன்னரறிந்தே இவனை "எண்ணம் மிக்கோய்" என அழைத்து "அவ்வெண்ணங்களை ஒழித்து இப்பொழுது நான் சொல்வதை ஏற்றுக்கொள்" என வாலி குறிப்புணர்த்தினுனாயினும், சுக்கிரீவன்பால் அது யாதும் பயன்தந்த பரிசு புலப்படவில்லை. கல்வியில் மிக்கான் அனுமன், இராமனைக் கண்டமாத்திரத்தில், அவனதுபரத்துவத்தை ஐயமறக் கொண்டு,

எம்மையே காத்தி ரென்ற
லெளிதரோ விமைப்பி லாதோர்
தம்மையே முதலிட் டான்ற
சராசரஞ் சமைந்த வாற்றன்
மும்மையே மூலகுங் காக்கு
முதல்வர்நீர் முருகற் செவ்வி
யும்மையே புகல்புக் கேமுக்
கிதின்வரு முறுதி யுண்டோ

என விளம்பவல்லவனாய் நின்றனன்; செவியுறுகேள்விச்செல்வம்படைத்தவனாகிய வாலி,முதலில் மயங்கினானேனும், வாதத்தின்முடிவைக்கொண்டு இராமன் கடவுளாதலுங் கூடுமென நம்பத்தலைப்பட்டுஅதனைக் கொண்டான். கற்றிலனாயினும் கேட்டதன் துணை இது. சுக்கிரீவனோ எண்ணம் மிக்கோன். கல்வியும் கேள்வியும் கைவரப்பெறுமல் எண்ணம் மிக்கவர்களாயிருப்போரெல்லாம் இச்சுக்கிரீவனையே ஒக்கின்ருர்-தாமாகவும்அறிந்துகொள்ளார், அறிந்தவர்சொன்னாலும் நம்பமாட்டார்; தாம் புத்தியில் திறமை வாய்ந்தவர்கள் என மதித்துத் தம்முடைய எண்ணச் சூழ்ச்சிகளுக்குள்ளேயே சுற்றிச்சுற்றிவந்துகொண்டிருப்பாரேயன்றி, உறுதியுடைய வாசகங்களை உட்கொள்ளும்குணம்இன்னவர்க்கில்லை. இதனைநினையாமல் வாலி, "மறைகளுமுனிவர் யாரும்......" எனப் பெரிய வாசகங்களால் பேசத்.தலைப்பட்டு, அது முடிவதற்குள்ளேயே, சுக்கிரீவன் இதனை நம்பவில்லைஎன அவன் முகக்குறிகொண்டு அயிர்த்து "இறையொரு சங்கையின்றி எண்ணுதி, எண்ணம் மிக்கோய்" என வற்புறுத்த வேண்டியவன் ஆயினான். 'சங்கைகொள்ளாதே' என்றதே, சுக்கிரீவன் சங்கைகொண்ட ஒரு குறிப்புத்தோன்றிய தென்பதைத் தெரிவிக்கின்றது. "வேறு எண்ணங்களில் மிக்கவனே, அவைகளை விடுத்து இப்பொழுது இதனைச்சற்றே யெண்ணுதி" என்னவே பாவம், வாலி, மிக்க பரிவுடன் வேண்டிக் கொள்கின்ருன். வேண்டிக்கொண்ட இவ்வேண்டுகோள் பயன்படுமென்ன நம்பி மீண்டும், "நிற்கின்ற செல்வம் வேண்டி நெறிநின்ற பொருள்கள் எல்லாம் கற்கின்ற இவன்றன் நாமம் கருதுவ இவனைக் கண்டாய்" என உற்சாகமுடன் உரைத்தனன். தன்னுடைய எண்ணங்களின் முழக்கத்தால் செவிடுபட்ட சுக்கிரீவன்காதுகளில் இதுவும்சேரவில்லை. ஆதலின், இவன் கண்ணிற்கெட்டிய வொரு சான்றினாலேனும் சாதிக்க முயன்றனனாகியவாலி "எற்கொன்ற வலியே சாலும்" எனச் சாற்றினான். எண்ணமே மிக்கவரிடத்தில் உண்மையைச் சொல்லி யாது பயன்? "தான் மாண்டுவீழ்ந்த பரிபவத்தை மாற்றிக்கொள்ளுமாறு இவ்விராமனை முழுமுதற் கடவுளென்ன உயர்த்திவைக்கின்ருன் போலும் இவ்வாலி" என்னச் சுக்கிரீவன் எண்ணமிட்டு, வாலியின் சொற்களுக்கு அசையாமல் நின்றிருத்தலும் இயல்பு. அந்நிலைமையை ஓர்ந்த வாலி, "இவன் நம்பினாலும் நம்புக நம்பாமல் ஒழிந்தாலும் ஒழிக; எவ்வாற்ருலும் இராமனது இணையடி இறைஞ்சி ஏவல் செய்வானேல், உய்வதற்கு அது போதும்" என் உன்னிப் பின்னர் அதனை வற்புறுத்தினன். தத்துவ உணர்வு போதிப்பதைவிட்டுத் தாஸியகைங்கரியத்திற்கு மாற்றிய வாலி பின்னரும்,

அருமையென் விதியி னுரே
யுதவுவா னமைந்த காலை
இருமையு மெய்தி னும்மற்
றினிச்செயற் பால தெண்ணின்
திருமறு மார்ப னேவல்
சென்னியிற் சேர்த்திச் சிந்தை
யொருமையி னிறுவி மும்மை
யுலகினு முயர்தி யன்றே.

[ஊழ்வினையே வந்து உதவுவதற்குத் தலைப்பட்டிருக்கும்போது அடைவதற்கு அருமையானது யாதுளது. இம்மைமறுமைகளின் இலாபங்களை நீஎய்தினவனானாய்.இனி நீ செய்ய வேண்டியதென்னவென்ருல், திருமகளையும் ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவையும் மார்பில்உடைய இராமனதுஏவலைத்தலைமேற்கொண்டு மனதைஒருமுகப்படுத்தி, மூன்று உலகங்களிலும் மேன்மையடைவாய்]

என மீண்டும் இயம்புகின்றனன். இன்னமும் சுக்கிரீவன்முகத்தில்நற்குறி தோன்றவில்லை. வேறென்ன! இத் தம்பியின் மனத்திற்கும் நிலைக்கும் ஏற்றவாறு கூறி அவனை இராமகைங்கரியத்தில் ஈடுபடுத்தலாம் என்று யோசிக்கின்ருன். சுக்கிரீவனது குணத்தைக் கருதுங்கால் அவன் எதற்கும் உடன்படுவான் என்றெண்ண இடமில்லைபோல் தோன்றவும் வாலியின் நெஞ்சம் பரிகின்றது. எனினும் முயற்சி தளராமல் பின்னும் பகர்வான்—

மதவியல் குரக்குச் செய்கை
மயர்வொடு மாற்றி வள்ளல்
உதவியை யுன்னி யாவி
யுற்றிடத் துதவு கிற்றி
பதவியை யெவர்க்கு நல்கும்
பண்ணவன் பணித்த யாவும்

சிதைவில செய்து நொய்திற்
றீர்வரும் பிறவி நீர்தி

[மதம்மிக்க குரங்கின் இயற்கையையும் மயக்கத்தையும் நீக்கி, வள்ளலாகிய இராமபிரான் உனக்குச் செய்த உதவியை மனத்துள் எண்ணி, அவனுக்காகச் சமயம் ஏற்பட்டபோது உன் உயிரையுங் கொடுக்கக்கடவாய். இதனால், எல்லாருக்கும் நற்கதியளிக்கின்ற கடவுளான இவன் இட்ட கட்டளைகளை யெல்லாம் நேராகச்செய்து, நீங்குதற்கரிய பிறவியை எளிதில் தீர்த்துக்கொள்.]

இன்னும் சுக்கிரீவன் தன் குரங்குப்புத்தியையொழித்திலனே என்னும் ஏக்கம் வாலியின் வாசகத்தினுள் தொனிக்கின்றது. வேறொன்றற்கும் அல்லாவிடினும் செய்ந்நன்றி மறவாமையின் பொருட்டேனும் இராமனைப் பணிந்து வாழும்படி சொல்கின்றான். தன்னைப்போன்றே இச்சுக்கிரீவனும் தீர்வரும் பிறவிதீர்தல் வேண்டுமென்பதே பெருந்தகைவாலியின் வேட்கை. இது நிறைவேறும்பொருட்டு வாலி முதலில் இராமனது பரத்துவத்தைச் சுக்கிரீவனுக்கு விளம்பினான். அதுவோ, எண்ணம் மிக்க அச்சுக்கிரீவன் மனத்திற் பதியவில்லை. பின் பொதுநின்றதலைமைநோக்கியோர் சான்று கூறினான். அதனையும் சுக்கிரீவன் நெஞ்சுற ஏற்றுக்கொள்ளக் காண்கிலன். பின், இராமகைங்கரியத்தின் மேன்மையைக் காட்டினான். சுக்கிரீவன் அக்கைங்கரியத்தை அதன்பொருட்டே மகிழ்ந்தளக்குறியும் அவன் முகத்திற்றோன்றிற்றில்லை. இனி, "கடவுளாக அவனுக்குக் கைங்கரியம் செய்யாவிட்டாலும் அவன் உனக்குச்செய்த உதவிக்குக் கைம்மாறாகவேனும் அவனது ஏவலைச் செய்க" என்கின்றனன். சுக்கிரீவனது தோற்றத்தில் எவ்வகை மாற்றமுந் தென்படவில்லை. இனி இவ்வெற்றரசிற்கு ஏற்ற சிறிய சிந்தனைகளேனும்இவன் மனத்திற்பதிகின்றனவோ எனச் சோதிக்கப் புகுந்தான்போல்

அரசியற் பாரம் பூரித்
தயர்ந்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாத நீங்கா
வாழுதி மன்ன ரென்பார்
எரியனற் குரியா ரென்றே
யெண்ணுதி யெண்ணம் யாவும்
புரிதிசிற் றடிமை குற்றம்
பொறுப்பரென் றெண்ண வேண்டா

[அரசபாரத்தைப்பெற்ற மகிழ்ச்சியால் களிப்படைந்து, அறிவு கெட்டு இகழாமல், இராமபிரானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை விட்டு நீங்காமல் வாழக்கடவாய். அரசர் என்பவர் பற்றியெரிகின்ற நெருப்பே என்றுபழகுவதற்கு உரியவர்என்றே எண்ணிக்கொள். ஆதலால்அவன் எண்ணப்படி அனைத்தையும்செய். சிறியஅடிமைகள் குற்றம்செய்தால் அரசர்கள் அதனைப் பொறுப்பார்கள் என்று எண்ணிவிடாதே]

என, அரசியற்குரிய சூழ்ச்சிகள் சிலவற்றைச் சுக்கிரீவனுக்கு நினைவு படுத்தினான். இத் திறத்தில்தான் "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்" அனைய சூழ்வினைச் செய்திகள் திருக்குறளினின்று வாலிக்கு உதவி செய்யவருகின்றன. அச்சத்தாலேனும்இராமனுக்கிவன் ஆட்செய்தாற் போதுமென்பது வள்ளல் வாலியின் நல்லெண்ணமாம். "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்பதை வாலி இறுதியாகக் கருதி இது கூறினான் என மதிப்பதாயின், சுக்கிரீவனை அது சால இழித்துவிட்டதாக முடியும். ஆதலின் அத்தூரம் செல்ல வேண்டா. எனினும், இவ் வச்சம்பற்றியேனும் தன் றமையனது உரையைச் சுக்கிரீவன் உட்கொண்டனனோ வெனின் அதுவும் அல்லன் என்றே எண்ணல் வேண்டும். நான்குமாதங் கழித்துச் சேனையோடு தன்பால் வரும்படி இராமன் சுக்கிரீவனை விதித்திருந்துமிவன் அரசியற்பாரம் பூரித்து அயர்ந்தனனாகி அப்பணியினை இகழ்ந்தனன் என்பது நமக்குப் பின்னரே தெரிய நிற்கின்றதாயினும், அன்னதற்கே உரியவன் இவன் என்பதை வாலி இப்பொழுதே அவன் முகத்தினின்று அறிந்து, இறுதியாக,

என்னவித் தகைய வாய
வுறுதிகள் யாவு மேங்கும்
பின்னவற் கியம்பி நின்ற
பேரெழி லானை நோக்கி
மன்னவர்க் கரசன் மைந்த
மற்றிவன் சுற்றத் தோடும்
உன்னடைக் கலமென் றுந்தி
யுயர்கர முச்சி வைத்தான்

[வாலி இத்தகைய உறுதிமொழிகளை யெல்லாம், ஏக்கமடைந்திருந்த தம்பியாகிய சுக்கிரீவனுக்குக் கூறி, பிறகு, அருகுநின்ற மிக்க அழகுடைய இராமபிரானை நோக்கி, "சக்கரவர்த்தி திருமகனே, இந்தச் சுக்கிரீவன் தன் சுற்றத்தவர்களுடன் உனது அடைக்கலப்பொருளாகின்றான்" என்று சுக்கிரீவனை இராமனுக்கருகில் செலுத்தி, உயர்த்திய தன் கைகளைத் தலைமேல் வைத்துக்கொண்டான்.]

இதனினுஞ் சிறந்ததுண்டோ! கல்வியால், கேள்வியால், கடவுளருளால், மெய்யுணர்வுபெற்ற மேலோர் மற்றைய எல்லோரும் எம்பெருமானுக்கு ஆளாகி உய்யவேண்டு மென்னும் உள்ளன்போடு முயல்வார். சுக்கிரீவன்பால் அன்னது முயன்றான் வாலி. சுக்கிரீவனோ எண்ணம் மிக்கவன் ; தன் சொற்கள் அவன்வயின் பயன்படாமை கண்டான் வாலி. ஏனைய நலன்களின்றி எண்ணமே மிக்க ஒருவன் தலையினை எட்டி "நீ கடவுளுக்கு ஆட்செய்வாய், செய்வாய்" என்று இடிப்பதனினும், அக்கடவுளின் கால்களையே பிடித்துக்கொண்டு, "கடவுளே, நீ அவனை ஆட்கொள்வாய், ஆட்கொள்வாய்" என்று மன்றாடுவதே சாலப் பயன்தரும் என்பதை வாலி, வேறு எத்தனையோ பல வித்தகர்களைப் போலவே, இறுதியில் உணர்ந்து தன் தம்பியை அவன் சுற்றத்தோடும் இராமபிரானுக்கு அடைக்கலமாக்கிய நுண்மையை நினைக்குந்தோறும், நல்லோர் இதயம் உருகிக்கரையும். இராமனைக் கடவுளென்றுகூறினால் இவ்வொரு தம்பி அவனைச் சரண்புக இசைவானோ அல்லனோ என்னும் ஐயமுடைய இவ்வாலி, முன்னையசெய்யுளில் அறிவுறுத்திய அவ்வரசியல் முறைக்கிணங்க இங்கு, "மன்னவர்க் கரசன் மைந்த" என்னவே இராகவனை அழைத்துக் காட்டுகின்றனன். இப்பொழுதும் சுக்கிரீவனை இராமன்பால் உந்தவே வேண்டியிருந்ததென்னின் வேறுசில சொல்லுவானேன். முன்னரே,

முரணுடைத் தடக்கை யோச்சி
முன்னவன் பின்வந் தேனை
இருணிலைப் புறத்தின் காறு
முலகெங்குந் தொடர விக்குன்
றரணுடைத் தாகி யுய்ந்தே
னருயிர் துறக்க லாற்றேன்
சுரணனைப் புகுந்தே னென்னைத்
தாங்குத றரும மென்று

கூறி, சுக்கிரீவன் இராமனைச்சரண்புகுந்திருப்பதுஉண்மையே. அது, தன் உயிருடன் மனைவியும், வாலியின் வெற்றரசையும் பெறவேண்டி ஓர் வீரனின் துணையை நாடிய உபாயம். இன்னவைகளுக்காகக் கடவுளையே ஆராதிக்கவும் இசையலாம். இவ்வாறின்றிப்பிறவிதீர்ந்து வீட்டரசுவாய்க்கும்படி முழுமுதற் பொருளைச் சரண்புகநினைத்தலோ அரிதினும்அரிதாகி யிருக்கின்றது. ஆதலாற்றான் அவ்வகைச் சரண்புகுந்த சுக்கிரீவனை மீண்டும் வாலி இங்கு இவ்வகையில் அடைக்கலப்பொருளாக்கவேண்டியது அவசியமாயிற்று. இச்செவ்வியில் சுக்கிரீவனை "ஏங்கும் பின்னவன்" என்பார் கம்பர். "எக்காலம் என் அண்ணன் இவ்வறிவுரைகளை முடித்து ஓய்வானோ" என்றுஏங்கினனோ, அல்லது, "அண்ணன் சொல்லும் இவையெல்லாம், உண்மையே என்று எண்ணவோ என்னால்இயலவில்லையே" என்றுஏங்கினனோ இயம்பலரிது. பின்னதுபொருந்துமெனக் கொள்வதே சுக்கிரீவனுக்கு ஒருசிறிது பெருமை தரும். அண்ணனுக்குத் தன்னால் நேர்ந்த கதியைக் குறித்துச் சுக்கிரீவன் ஏங்கிய செய்தியோ கம்பர் நூலில் தென்படவில்லை.

199192

சூளாமணி

[635-வது பக்கத் தொடர்ச்சி]

இரதநூபுரச் சருக்கம்

(மேலே, தோலாமொழித்தேவர் அவ்வரசனுடைய மனைவியைப்பற்றிக் கூறத்தொடங்குகின்றார்.)

28. ஈதோ ஒருபெண் அவ்வரசனுக்கு எதிரேவருகின்றாள். புன்முறுவல் பூக்கின்றாள். உள்ளொன்று வைத்துப் புறமொன்றுபேசும் முறுவல் அல்லஇது: மனத்தின் தூய்மையை மணாளனுக் கோதும் முறுவல் ஆகும். இம்முறுவலின் வெண்ணிலவால் இவளுடைய வாய் மிகச் சிவந்து அழகுபெற்று மன்னவன் மனத்தைக் கொள்ளைகொள்கின்றது. இவளது காதல் அவன்மீது காற்றினும் விரைந்து பாய்கிறது. ஆம், இவள் பெயரும் வாயுவேகைதான். என்றும் வளரும் இன்பக்கொடிபோல் திகழ்கின்றாள். கொடியாதலின் கொழுகொம்பாம் தன்கணவன்மீது தவழ்தலையும் கூறவேண்டுமோ? அவ்வாறுஇவள் அவனைத் தழுவி நிற்கும்போது, என்ன காட்சியைக்காண்கின்றோம். தீயோர்களதுமாயச்செய்கைகளைமாயச்செய்த மாயவனுடைய அகன்றமலைபோற்பரந்தமார்பிலேமிக விரும்பித் தங்கும்அப்பூமகளாம் திருப்பிராட்டியின் நினைவுவருகிறது. தீயோரது தீமைகளைமாயச்செய்யும் அந்த அரசனின் வரைபோன்ற மார்பிலும் திருவே போல விளங்கிக் காட்சி கொடுக்கின்றாள் இவ் வாயுவேகை.

29. அரசனும்அரசியும் இயைந்தபொருத்தம்இது. பெண் என்ற வகையில் இவள் எப்படி விளங்குகின்றாள்? அரசனோ மக்களிலே தலைசிறந்தவனாய் பைம்பொற்பட்டமணிந்தவொரு கொல்யானையின்மீதேறி விளங்குகின்றான். அங்ஙனமே அரசவடையாளமாம் செம்பொற் பட்டம் கட்டிக்கொண்டு நிற்கிறாள் இவ்வரசி. அப் பட்டமும், இவளுடைய அழகு பொலிகின்ற திருநுதற்கென்றே ஏற்பட்டது போலவும், கூடவே பிறந்ததுபோலவும், செறிந்து கிடக்கின்றது. பட்டத்திற்கென்றே பிறந்தவள் இவளேயாம். அழகிய பொன்கொண்டெழுதிய பட்டுடை பூண்டுவிளங்குகின்றாள். பட்டமும் பட்டும் சூடியஇவள், அழகிய பொற்றகடுசூடி இயற்கையிலே நறுமணம் வீசிநிற்கும் கூந்தலாற் சிறந்தாளாய் நம்மால் வாழ்த்தப்பெறுகிற அந்நாட்டுக் கற்புடை மகளிர்க்கெல்லாம் அழகினுக்கழகு செய்யும் சிறந்ததோர் அணியாக ஒளிர்கிறாள்.

30. கொவ்வைக் கனிபோன்று மெத்தெனத்திரண்டு அரசன் மனமும் வழுவழுத்திட, மின்னிச் சிவந்து நிற்கின்றது இன்னவள் வாய்; அதில்இருந்துஎழும் ஓசையோ, குழலிசையேயாம். காணவும் அழகிதாய், தொடவும்குளிரும் கொடியேபோல் நிற்கின்றாளிவள் இவள்கண்களோ இன்றெலாம்அவ்வரசன் பார்த்து நின்றாலும் "இன்னும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்" என்றுதோன்றும்படி நீண்டு அழகிய கண்கள்; மருந்து நோக்கால் கருங்குவளையினும் குளிர்ந்தொளிர்கின்றன, நோய்நோக்கால் வாளேபோல மின்னிப் பொலிந்து அசைகின்றன. கோவை வாயிலே குமிழ் சிரிப்போடு குழலென மழலைபேசி, அவன்றன் உடல் குளிரவும் அதனால் தன்னுடம்பு மயிர்பொடித்து ஒரு புதுவிளக்கம் பெறவும் அவனைக் கொடிபோலத் தழுவி, தனது கண்ணையே நோக்கி நிற்கும் அவனைக் குளிரநோக்கியபின் மயங்கி நாணித் தன்பார்வையை அங்கும் இங்குமா வோடவிட்டு ஒசிகின்றாள். அந்த நிலையில் ஒருண்மை நமக்கு விளங்குகின்றது. அவ்வரசன் முன்னெல்லாங் கூறியபடி விளங்குவதன் உண்மை இப்பொழுது வெளியாகிறது. இத்தகைய மனைவியைப்பெற்று இவளே உயிராக விளங்க இவள் அறவழியிற் சிறத்தலின் அவனும் இத்தகைய காவலன் ஆயினான். ஆம்—அவனுடைய ஆவி இவளே யாம். உடலிவன், உயிரிவள்; ஈதொரு பொருத்தமிருக்கும்படி என்னே. பெண்ணை உயிர் ஆக்கி ஆணை உடலாக்கிய தோலாமொழித்தேவரின் உட்கருத்து யாது? சொன்னால் பொல்லாப்பேயாம். அவனுக்கென இவளும் இவளுக்கேயென அவனும் பிறந்து வளர்கின்றனர். ஆண்டவன் நமது ஆவியாய் நின்றொளிர்ந்தும், அதனையுணராதபோது துன்பமும், உணர்ந்தபோது இன்பமும் பிறக்கும் என்பர் அறிவாளர். அங்ஙனமே இங்கும் இவள் ஆவியாய் நின்றொளிர்ந்தும், அதனையுணராமல் பிரிந்துநின்ற நிலையில் நோய்செய்த அணங்காயும், உணர்ந்து மணந்து கூடியபோது புத்துயிரளித்து இன்பமூட்டும் அமிழ்தமாயும் விளங்குகின்றாள். இயற்கையிலே இருந்த பொருத்த மீது. மேலும் கல்வியறிவொழுக்கங்களாம் செயற்கைப்பண்புகளாலும் தொழிற்பாடுகளாலும் அவன் விரும்பும் தன்மையளாயும் விளங்குகின்றாள். 'பழகப் பழகப்

82
M41.N28k N

பாலும் புளிக்கும்' என்ற அந்தப்பழமொழி இங்குப் பொய்த்துப் போய்விட்டது. நவிருெறும் நூனயம் போலவும், அறிதோ றறியாமைகண்டமைபோலவும் நாளும் நாளும் புதியவளாகிப் புத்தின்பமூட்டி நிற்கின்ருள்.

31. வாயுவேகை புன்சிரிப்புடனேயே நம்மெதிரே காட்சிகொடுக்கின்ருள். களங்கமற்ற அந்தநகைதான் அரசனுடைய மனத்தை உருக்குகின்றது. முருக்கம் பூப்போற் சிவந்த வாயினிடையே, சிவப்பிற்குஅருகே வெளுப்பாக மயிலிறகின் குருத்துபோன்ற பற்களின் ஒளிதோன்றஅழகுநிலவுமெழியும் புன்முறுவல்பூக்கின்ருள். அவ்வேந்தன்மனதை அந்நகை உருக்கிவிடுகிறது. அவளுடனே கூடி இனிதுமகிழ்கின்ருன். அப்போழ்து, அவர்களுக்குப் பலவகைச்செல்வங்களும் மேலும்மேலும்பெருக ஒருபுதல்வன் பிறக்கின்ருன். செல்வம் செல்வமாவது சிறு குழந்தைகள் தவழ்ந்தோடியாடும்பொழுதே யன்ருே? மறத்திற்கோர் அறிகுறியாகக் கழல்அணிகின்றனர்; இன்பத்திற்கோர் அறிகுறியாக அலர்ந்த பூந்தார் அணிகின்றனர். கதிரவனெனப் பரந்த புகழான் என்றுபொருள்படும் அருக்ககீர்த்தி என்னும் பேரும்பெறுகின்ருன். பின்னைய பெருவாழ்வை நினைப்பூட்டி முன்னே தவழ்கின்றது குழந்தை.

வீடுமன்

தந்தை காதலுறு தன்மைகண்
டிளைய தாய்பயந்த விருதம்பியர்க்
கிந்த வாழ்வுமரசுங் கொடுத்தவனும்
நின்குலத் தொருவ னிங்குளான்
முந்த மாநில மனைத்தினுக்கு
முயர்மு றைமையா லுரியபாண்டவர்க்
கைந்து மாநகரு நீகொடா
தொழியி லென்னதாகு முனதரசியல்?

என்று கண்ணபிரான் அன்று துரியோதனன் சபையில் வீடுமனை அவன்முன் போற்றியருளினர். தாளனைய தாமரையைக் கண்டு தலைசாய்க்கும் கதிர்ச் செந்நெலென்ன அவனும் வணங்காநின்ருன். சான்ருேர் கவியெனவே அமைந்த அவ்வீடுமனது அபாரமான எழிலமைந்த வாழ்க்கையை ஆராயப்புகுந்தால், சிறந்த கவிதைச்சொற்களால் வருணிக்கப்போகுமேயன்றி, வேறு சாலுமோ? அத்தகைய சொற்களால் மனஓவியம் எழுதும் கவியோ யானல்லேன்.

தந்தை யின்ப மெய்தத் தவமே யின்ப மாகச்
சிந்தை தெளியு ஞானச் செல்வா செஞ்சேவகனே

என்றுஆராய்ச்சியும்திகைக்கும்வண்ணம் செஞ்சொலோவியம் புனைவான் பாரதவாசிரியன். அத்தகைய விடங்களில் ஆராய்ச்சியும் செல்லவல்ல தகைத்தோ! ஆயினும் வீடுமனது பண்பினைப்பற்றி ஒன்றிரண்டு குறிப்புக்கள் வரைந்து,உரைதவறும் காலை,கவிஞரது கவிதைத்தீபத்தைக்காட்டிநின்று ஒதுங்கிவிடுகிறேன்.

கங்கைதன் வயிற்றிற் ருேன்றித்
தாதைதன் காதல் தீர்ப்பான்
எங்களுக் கரசும் வாழ்வும்
இருநில முழுதும் தந்து
வெங்களத் துதயன் போல
வீடுமன் களத்தை யெல்லாம்
செங்களப் படுத்தி மீண்டும்
தேவரில் ஒருவ னுனன்.

என் றிராசராசன் மதுரமாகவும் உணர்ச்சியுடனும், தனக்கே யுரித்தான பொருளாழமுள்ள சொற்களில் வீடுமனது வாழ்க்கையின் சாராம்சத்தைச் சொன்னுன். கங்கைதன் வயிற்றிற் ருேன்றி, என்றவுடனே எவ்வளவு கருத்துக்கள் புணரியிடைப் பொருள்கள் போலப் புரள்கின்றன! அக் கங்கையைப்போல் உலகம் புரக்கும் உணர்ச்சியும், புனிதமும் * சான்ருேர் கவியெனக் கிடந்ததன்மையும், அம்மாநதி உலகூட்டும் தனது வெள்ளத்தால் உலகை யழிப்பதுபோல், போரில் தருமத்தின் சார்பாக நின்ற பெருஞ்சேனை வெள்ளத்தை யழிக்கும் பெருவீரமு மன்ருே தொனிக்கின்றன! இக்கருத்துக்களே, மேற் செய்யுளின் மற்றை மூன்றடிகளில் விரிக்கப்பட்டிருக்கின்றன.

வீடுமனது சிறுபருவத்தைப் பற்றி, அவனது பிற்றைநாட் பகுதியைப்போல் ஒன்றும் விவரமாகத் தெரியாது. மல்லிகைமொட்டினைப்போலும், கங்கைதன் கொழுந்தைப் போலும் மென்மையும் புனிதமுமுடைய ஒருபாலகன் திடீரென்று கடுவிரதம் மேற்கொண்டான். அவ்விரதம் பயங்கரமான தென்பதைக் குறிக்கவே 'வீடுமன்' என்றவனுக்குப் பெயரிட்டனர். ஆயினும்,வீடுமனது வாழ்க்கையில்பயங்கரம் ஒன்றுமில்லை.வாழ்க்கையின் பயங்கரத்தையெல்லாம் விரதமாகவே வெளியேபோகவிட்டு, வாழ்க்கையின் இச்சையெல்லாம் ஒரு நெட்டுயிர்ப்பினுல் அகற்றி, அணைந்த எரிமலை போலவும் பெரும்பாரம் தாங்கும் கற்றூணைப்போலவும், சலிக்காது தனதுநெடியவாழ்க்கையைத் தாங்கிவந்தான். கர்ணன் முதலியோரால் எத்துணை யிகழ்ச்சி! துரியோதனனுக்கு எவ்வளவு இயற்றியும் அவமானமும் தோல்வியும்! தன் இஷ்டத்திற்கு விரோதமாக எத்தனை அதருமச்செயல்கள் புரிய நேர்ந்தன! ஆயினும்,யாவற்றையும்,தன் தந்தைக்கீந்தவரத்தினை நிலைநிறுத்தவேண்டியே, பொறுத்துக்கொண்டு அடிக்கடி பெருமூச்செறிந்து அந்த நெட்டுயிர்ப்புக்களால் இதயத்தைத் திண்மையாக்கித் தன் விரதம் வழுவாமல் காலத்தைக் கழித்துவந்தான்.

கன்னன் அவனை இகழ்வதைப் பற்றி மிகுதியும் கூறவேண்டியதில்லையென்றே நினைக்கிறேன். அதைப் பற்றிவிரிவாக முன்னெழுதியவியாசத்தில் (கர்ணன் மாண்பு) விளக்கியிருக்கிறேன். வடமொழிப்பாரதம் பயின்றிருப்பவர்சிலர் வீடுமனுக்கு,கன்னனை வீணுக இகழ்வதே சுபாவமென்பர். அது உண்மையாயிருக்கலாம். ஆனுல் வில்லிபாரதத்தில், நாம் காணுந்தோறும், எங்கெடுத்துக் கொண்டாலும் குற்றம் கன்னன் பங்கிலேயே இருக்கக் காண்கிருேம். உலூகன் தூது சென்ற காலத்தில் இவ்விருவருக்கும் நடந்தவாக்குவாதத்திடைக் கர்ணன், "என்ன சேவகம்கொண்டுநீ யாரையுமிகழ்ந்துரைப்பது" என்று அவனதுசேவகத்திற்கோர் அவதூறு கூறியதற்கன்ருே வீடுமன்சினங்கொண்டு அவனுக்கெதிர்வாய்மை விளம்பினுன். மற்றும், விதுரன் வில்லிறுத்தகாலை, அரசனுக்குப் பிதாமகனும் அவனுக்கென்றே, ஆவி, பொருள், உடல் நலம் அனைத்தும் அர்ப்பித்தவனுமான அவ்வீடுமனை "அருகிருந்தமுதருந்து நீ, இவனுடன் சிலர் பகைக்கின் மற்றவர்த மிசையும் ஆண்மையும்இயம்புவாய்" என்றுகன்னன் கூறியஇறுமாப்பினைஎன்னென்பது!

தனிப்பட்ட இச்சின்மதியாகிய கன்னன் கூற்றை நாம் மிகுதியும் கணிசிக்கவேண்டுவதுஇல்லை. ஆனுல் சுயோதனனும் சிற்சில சமயங்களில், தனக்கேயுழைத் தேழையான அப்பிதாமகனிடம் நடந்துகொள்ளும் முறையினை நோக்குவோம். வீடுமன் அவனுக்கு ஆவி பொருள் நலம்அனைத்தும் ஈந்தானெனக் கூறினேன். முக்கியமாக 'ஆவியை' எவ்வகையில் விற்ருனென்பதைக் கூர்ந்து ஆராய்வோம். திரௌபதியைத் துகிலுரிந்தபோது சபையில், விதுரன் ஆற்ருது சினந்து நோக்க, வீமனும் விசயனும் கொந்தளிக்க,விகர்ணன் அறங்கூற, அலகைக் குலங்கள்போல் மற்ருேர் ஆட, கர்ணனும் சுபாவமான சில புன்சொற்கள்புகல,அம் மடவரல்,

மல்லார் திண்டோள் மாமாவோ
மந்தா கினியாள் மதலாயோ
எல்லா நெறியு முணர்ந்தவருக்
கிதுவோ மண்ணி லியல்பு

என் றுஎந்நெஞ்சையும் விள்ளத்தக்ககுரலில்,"கங்கையென்னும்பெண்வயிற்றுதித்தவனே,என்மானத்தைக்காப்பாயாக" என் றபயமிட்டு அழுதபோது, யாது செய்தான் வீடுமன். தான்மணந்த மௌனதேவிக்கு விபத்துநேர்ந்ததேயென்றுவியர்த்து,திருதராட்டிரன் வாளாவிருக்கத் தான் சுயோதனனைக் கண்டித்தால் தன் சபதம் அழியுமென்று கொண்டு,

மன்னற் கிளையோய் தவறுரைத்தல்
வழக்கோ வடமீ னனையாளை

என்று துச்சாதனனைச் சிறிதே கண்டித்து, பாஞ்சாலியைப் பார்த்து, "நீயுரைத்தவெலா மரசற் கியம்புதி" என்று தன் பழியைக்கழித்துக்கொள்வான்போல் புகன்று அணைந்த எரிமலை யென்ன ஒன்றும் ஆற்ருது நின்ருன்.

அது ஒன்றுதானே! சுயோதனனுக்கு ஆருயிர் நண்பனுயிருந்தும், அவன் மனைவியுடன் ஏகாந்த இடத்தில் கவறுடும் அவ்வளவு நேயனுயிருந்தும், கன்னனே சுயோதனனுக்காக என்றும் அதருமப்போர் புரிந்ததில்லையல்லவா? ஆனுல், முதல்நாட்போரில் நடந்ததைக் கூர்ந்துபார்ப்போம். பாண்டவசேனைநாதன் சிவேதன் பதினெட்டுநாட் போரினையும் ஒரேநாளில் சுருக்குவான்போன்று போர்செய்து எல்லோரையும் வென்றுபின் வீடுமனையும் அண்மினுன். அண்மி அவ்வீடுமனை எதிரம்பு கோக்காவண்ணம் முறியடிக்கவே அவனும்கலங்கினுன். திரும்பித்திரும்பிப் பயின்றும் அமர்திளைக்க முடியாமற்போகவே, வீடுமனும் சிவேதனைச் சூதினுல் மாய்க்கவெண்ணி,

வாகைவரி வில்லொழிய வாளயில்க ளென்னும்
வேகமுறு வெம்படைகள் கற்றிலைகொல் வெய்யோய்

என்று அவனைப் பர்த்து உரைக்கவே, மற்றவனும் வெள்கி, வாள்கொண்டு அவன்மேல்பாய்ந்தான். உடனே அப்புண்யமலை வீடுமன், சிலைகுனித்து அவனது கரமொன்றைஅறுத்துத்தள்ளினுன். பின்பதின்மூன்ரும்நாட்போரில் கன்னன் அபிமனைத் தேர் சிலை முதலிய அழித்தான். உடனே அபிமன் வாளோடவன் மேல்பாய,மற்றவன் அவனை எதிர்க்காது அவ்விடம் விட்டேகினுன். பிறகுதுரோணன் அவனதுகரமொன்றை அறுத்துத் தள்ளினவுடன், இரக்கமுற்று அவனும் ஓடினுன் என்று அறிகிருேம். ஆனுல் வீடுமனே கன்னனைப்போல் நெறியான போர் இயற்ருததோடு, துரோணனைப்போல் செய்தது தவறென்றும் உணராமல், சிவேதனது இருகரங்களையும் அறுத்துத்தள்ளி, நிராயுதனைப் பல்லாயிரம் ஜனங்களின்முன் வெட்டி வாகை புனைந்த உரோமசக்கிரவர்த்தி கம்மோடஸ்* அரசனென நின்ருன்.

இவ்வக்கிரமத்திற்கேற்ற பரிசினும் வீடுமன் பெருதிருப்பதில்லை. பதினுன்காம்நாட் போரில் அருச்சுனனும் சாத்தகியும் சேர்ந்து, பூரிசிரவன் என்னும் அதிரதனை எதிர்த்து அவனை முடித்தார்கள். உடனே இராசராசன், 'இருவரும்சேர்ந்து ஒருவனேடுபோரிட்டது மன்னற மன்று' என்னக் கண்ணன்முன் வந்து சொல்ல,

"நென்னல்நீர் அபிமன் தன்னை
நேரற வென்ற போரும்
முன்னமே சிவேதன் தன்னை
வீடுமன் முடித்தபோரும்...போதுமோ"

எனச் சிரித்தார் கண்ணன். கடுவிரதத்தினுல் கொண்டபுகழெலாம் இவ்வடுவினுல் சிதையுமன்ருே? மற்றும், தனக்கு அதிரதப்பதவி அளிக்காமையினுல் கன்னன் கங்கைமைந்தனுடன் சீறி, 'நீ யுயிர்மாளு மளவும் யான் படைதொடேன்' எனக்கூறினுனல்லனே? எட்டுநாளளவும் பகைவரைக் வெல்லக் காணுததால் சுயோதனன் கர்ணனிடம் சென்று தன் மனக்குறையைச் சொல்லிப் போர்செய்யச்சொன்னதற்கு மற்றவன், 'வீடுமன்,

விற்கவ்வு வாளி அடலைவர் மீது
விடலஞ்சி வீரர் எதிரே
புறக்கவ்வு மாகில் விரைவோடு கங்குல்
புலராமுன் வந்து பொருவேன்

என்று தன்பழிதீரவெஞ்சினத்துடன்மொழிந்தான். 'துச்சாசனு, சென்று இம்மொழியைக்கங்காசுதனுக்குரை' யென்ன, சுயோதனனது அனுமதியின்மேல் அம்மதியிலான் "நாளைநாம்முடித்தும் வெய்யபோர்' என விருக்கும் வீடுமனிடத்தே கூறினுன்.

இவ்வளவுதூரம்,கௌரவர்பொருட்டுவீடுமன் அக்கிரமத்தில் ஈடுபட்டுநின்றது, தான் கேவலம் விசித்திரவீரியன் மகனுகிய திருதராட்டிரனது ஏவலாளனே என்னும் தாழ்மையினுலே யாகும். தன்னை அரசனுக்குச் செஞ்சோற்றுக் கடன்கழிக்கும் ஒரு ஏவலாளனெனவே கொண்டு மனமொழி மெய்களால் தந்தை பொருட்டுக் கொண்ட விரதத்தினை நிறுவுவானுனன். மற்று, விதுரனும்அம்முறையில் அரசனுக்கேவலாளனல்லனே! அவன் திருதராட்டிரனுக்கு அறங்கூறிப் போதித்துப் புண்ணியமாக்குவதுபோல் வீடுமனும் செய்யலாமல்லவா ? எனின், வீடுமனுக்கு இயற்கையாகவே விதுரனைப்போல் பிறர்குற்றத்தைக் கண்டிக்கும் கடுமையும் வன்மையும் கிடையாதென்பதை நாமொரு சிறிது ஒத்துக்கொள்ளலாம். ஆயினும் அது

---

* 'சான்ருேர் கவியெனக் கிடந்த கோதாவரி'

"The life that was a perfect poem is no more"
—Sir William Watson.

'கழிந்ததேயந்தோவந்தோ கவிதையாயமைந்தவாழ்க்கை.

* இங்குத் திட்டத்துய்மனைக்கூறுது, உரோமஅரசனை உதாரணம் கூறியது, துரோணன் வில்லையெறிந்துமரணத்தை வரவேற்றுநின்ருனுதலின் அவனைத்திட்டத்துய்மன் மாய்த்தது விதிவகையினுலேயே யாகும்.

ஒன்றே அமையாது. ஏனெனில் கர்ணன், சுயோதனனது ஆருயிர்நண்பன், புரியாத மறச்செயலை வீடமன் அச்சுயோதனனுக்காக இயற்றினன் அல்லனே? கன்னனுக்கில்லாத செஞ்சோற்றுக்கடன், முன்னவனுக்கு மாத்திரம் என்னே? உண்மை யென்னவெனில் வீடமனுக்கு இயற்கையாகவே சுயோதனனிடத்தில் பாசம் அதிகம். சுயோதனன் எவ்வளவு அக்கிரமச் செயல் புரிந்திடினும், அவன்மேல் வைத்த பரிவினல், அவனைக் கண்டிக்காதிருப்பதும், அவ்வினைகளால் ஆபத்து நெருங்கும்போதுமாத்திரம் பரிவுடன் ஏங்குவதுமாகிய பாட்டனதுஅன்பை நாம் பலவிடங்களிலும் காணலாம். மாதைத் துகிலுரிந்தபோதும், கண்ணன் தூதுவந்தபோது அரசசபையில் அவனைப் போற்றி நியாயம் வேண்டியபோதும், ஒரு சொல்லும் வெளியிடாத வீடமன், சுயோதனன் மொழிகளுக் காற்றுமல் விதுரன் வில்லிறுத்தகாலை,

> பாரனைத்துமினி ஐவராளும்வகை
> பண்ணுவித்தனை அழிந்ததுன்
> பேரனைத்துமென உள்ளழிந்துசில
> பேசினனுயர் பிதாமகன்.

இப்பரிவு இயற்கைப்பாசமா, அல்லது ஏற்றுக் கொண்ட பரிவா, என்னும்கேள்விக்குஇருவகையான விடைகள் இல்லையல்லவா? மற்றும் பல சமயங்களிலும் அரசசபையில் எதிரிகளது பலத்தைப்பற்றிக் கூறுவானே யொழிய, அவர்களது அறத்தைப்பற்றி மிகுதியாகக் கூறுன். நிற்க, மூன்றும்நாட்காலைஇராசராசன் கடோற்கசனது அம்பினுல் சோகித்தபோது வீடமன் சென்றவேகத்தையும் துடிப்பையும் கவிஞரே வருணிக்கட்டும்—

> விழுந்தான் வேலால் தேர்ப்பாகன்
> வெஞ்சா யகத்தால் விறல்வேந்தர்
> தொழுந்தா ளரசன் தானுமுயிர்
> சோர்ந்தா னென்னுந் தொனிகேட்டுச்
> செழுந்தார் வாகை விசயனையும்
> திருமா லையும்விட் டொருமுனையா
> எழுந்தான் மந்தா கினிமைந்தன்
> இளைத்தோர் தமக்கோ ரெயில்போல்வான்.
>
> வண்டா ரலங்கல் வலம்புரியோன்
> மார்பந் துளைத்த வாளிவழி
> கண்டான் எடுத்துத் தாழ்ந்ததிருக்
> கையா லெடுத்துக் காற்றேரில்
> கொண்டான் ஆவி தருமருந்து
> கொடுத்தான் அவனும் கொடுத்தமருந்
> துண்டான் உண்ட கணத்தினின்மீண்
> டுணர்ந்தான் உலகே ழுடையானே.

இப்படி இராசராசன் உணர்வுற்றதும், கோபதாபங்களடங்கிய இவ்வணைந்த எரிமலை நெருப்பைக் கக்குவதைப் பார்மின்!

> மன்னன் தனையச் சந்தனுவின்
> மைந்தன் பெரும்பே ரணிநிறுவிப்
> பொன்னங் குன்றே இவன்சிலையும்
> இவனே காணும் புராரியென
>
> ....
>
> செருமும் படிவெங் கணைமாரி
> சிந்திச் சிந்திச் சிரந்துணித்து
>
> ....
>
> மலையொத் ததிரும் கடகளிறும்
> வயமா வனியும் மான்தேரும்
> தொலையத் தொலைய யாவரையும்
> சுடுவெங் கணையாற் றுரந்துதுரந்
> தலையத் தரங்கம் எறிகடல்வாய்
> வடவா னலம்போ லவனின்ற

அந்நிலைபைக் கண்டு என்ன எண்ணியிருப்பார் கண்ணன் என்பதை உங்கள் மனோதர்மத்திற்கேவிட்டுவிடுகிறேன்;

> நிலையைக் கண்டும் காணன்போல்
> நின்றுன் விசய னிகரில்லான்

என்று புலவர், அருச்சுனனது தன்மையைமாத்திரங் கூறுகின்றார்.

சம்பந்தர் காலத்திய தமிழ் மங்கைமார்

> பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
> மலைச்செல்வி பிரியா மேனி
> அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான்
> அமரர்தொழ அமருங் கோயில்
> தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தோறும்
> இறைவனது தன்மை பாடிக்
> கருந்தடங்கண் ணூர்கழல்பந் தம்மானை
> பாட்டயரும் கழும லமே.

ஆளுடைய பிள்ளையார் காலத்தில் இருந்த பெண்மணிகள் எத்தகையோர் என்பதை அவர் தேவாரத்தாலும், ஏனைய திருமுறைகளாலும், அகச் சான்றுகளைக்கொண்டு விளக்குவது இங்கு எழுதப்பெறுகின்ற இக்கட்டுரையின் கருத்தாகும். இக்காலத்தியமங்கைமார்களின் தொழில் யாது என்பது நிர்ணயிக்கக் கூடவில்லை. ஆங்கிலக் கல்வியில் அறிவுமுதிர்ச்சி வேண்டுமென்பர் சிலர். அம்மா! அது மிகவும் கொடிது என்பர் பலர். இரண்டு நூற்றுண்டுகளுக்கு முன்னர், சற்றேறக்குறைய 1000 வருடங்களாக மகமத்திய நாகரிகத்துக்குட்பட்டநமதுநாட்டோர், மாதர்களெல்லாரும் அந்தப்புரத்தில்வசிக்கவேண்டியர்என்றும், தமதுதாய்தந்தையர்சகோதரர்கணவர்ஆகியோர்கண்களில்மாத்திரம்படாமலன்றி ஏனையமனிதர்கள் கண்ணில்பட்டால் அவர்கள் கற்பழிந்ததென்றேயும்கூறுவாரும்உளர். இக்காலத்தில் நமது தேசத்தில் பற்பல தேசஆசாரங்களும் பற்பல மதஆசாரங்களும்வெகு வேகமாய் நம்மை மோதுவதனுல் பெருஞ் சுழலில் பட்ட ஓர் வெள்ளம்போல் நாம் இருக்குகின்றோம். இக்காலத்தில் நல்லதுஎது, தீயது எது, மெய்க் கல்வி எது, போலிக்கல்விஎது, நாகரிகம்எது, மிலேசத்துவம் எது, (Barbarism) என்று நிர்ணயிக்கக்கூடாமல் இருக்கின்றன. ஆண்மக்களான நமது சகோதரர்கள், அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதா, மற்று, அரசாங்கத்தை எதிர்ப்பதா, எவ்விதமான உடை உடுப்பது எவ்விதமான தொழில் செய்வது, என்பனபோன்றவற்றை நிர்ணயிக்கக்கூடாதபோராட்டத்தில்ஆழ்ந்து தியங்குகின்றனர். இவர்களோ தமது சகோதரிகளுக்கெவ்விதமான கல்வி கொடுக்கவேண்டுமென்பது நிச்சயிக்கக்கூடிய சக்தியற்றவர்களாய், காலத்துக்கொரு

பேச்சும் தலைக்கு ஒருபேச்சுமாய், இன்றைக்கு நன்று என்பதை நாளைக்குத் தீது என்று பூர்வபட்சம் செய்வதில் வெகு வல்லவராகியகல்வியே பெற்றிருக்கின்றனர்.

> "வாது செய்து மயங்கு மனத்தராய்
> ஏது சொல்லு வீராகிலும் ஏழைகாள்
> யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
> மாதேவன் அல்லால் தேவர்மற் றில்லையே"

என்று அப்பர்மூர்த்திகள் சொல்லியுள்ளவாறு எத்தொழிலை எடுத்தபோதிலும் அதுநன்குமுடிவதற்குச் சிவபெருமானது திருவருள் அன்றி யாதும் விமோசனம் இல்லை என்று கைவிடுவர்.

இத்தகைய நிலையில் நமது தேசத்தில், கல்வியில் குறைந்தும், தேக வலிவில் பதர்போல் சக்தியற்றும் சூத்திரப் பாவைகள்போல் ஆண் மக்களால் ஆட்டப்பட்டும், சிறைச்சாலைபோல் ஒவ்வொரு வீட்டிலும் அடைக்கப்பட்டுமிருக்கிற மாதர்களால் இக்காலத்தியற்றக் கூடியது என்ன? என்பதை ஆராய்வதற்கு, புகலிவேந்தர் காலத்தில் (இவர் நமது சமயாச்சாரிகளில் முதல்வராய்க் கூறப்பட்டுள்ளார்) நமது சகோதரிகள் எவ்வாறு ஒழுகினர்கள் என்பதைக் கண்டு கொள்வது உதவும். நாமும் அவ்வாறு ஒழுகுவதே சன்மார்க்கமாம். இக்கட்டுரை இனிது நடைபெற, கடவுள் வாழ்த்தாகக் கூறப்பட்ட சம்பந்தர் பாசுரம், இவ்விஷயத்தின் முக்கிய அம்சங்களை விளையாட்டுக்காட்டுவதுபோல் காட்டி நமக்குப் பேரின்பத்தை ஊட்டும். அதைச் சற்று ஆராய்வோம்:—

பெருந்தடங்கண் - பெரிய விசாலமான கண்களையும், செந்துவர்வாய் - செவ்விய பவளம் போன்ற வாயையும், பீடு உடைய-மேன்மையையும் உடைய, மலைச்செல்வி- மலையரையன்மகளாகிய பார்வதிதேவியார், பிரியாமேனி- ஓர்உடம்பு இருவராகப்பிரியாமல் திகழ்கின்றதிருமேனியையுடைய, அருந்தகைய-அருமையாகிய தன்மையுடைய, சுண்ணவெண் நீறு - சுண்ணம்போல் வெண்மையான திருநீற்றை, அலங்கரித்தான் - திருமேனியில் தரித்தவராகிய சிவபெருமான், அமரர் தொழ - தேவர்கள் வாழ்த்த, அமரும் கோயில் - தங்கிய திருக்கோயில் (யாது எனில்- கழுமலம் - சீர்காழி என்றும், அக்கழுமலமாகிய சீர்காழியின் சிறப்பு யாது என்றும் அப்பாசுரத்தின் பிற்பாதியில் விளக்குகின்றார்)

தருந்தடக்கை முத்தழலோர்-முத்தழல் ஓம்புகின்றவர்களும் கேட்போர்க்கு இல்லை எனாது கொடுக்கின்ற விசாலமான கைகளையுடையவருமாகிய வேதியர் என்றார். வேதியர்களுக்கு அறுதொழில் உண்டென்றும், அவற்றில் ஏற்பதே முன்னதாகவும் ஆரிய நாகரிக வேதியர்கொண்டாரெனினும் தமிழ்நாகரிகமுடைய நமது வேதியர் பின்பாசுரத்தில் அவர் காட்டியது போல்:—"விலங்கலமர், புயன்மறந்து மீன்சனிபுக்கு ஊன்சலிக்குங் காலந்தானுங் கலங்கலிலாமனப்பெருவண்கையுடைமெய்யர்." ஆகையால் அவர்கள் ஈகைத் தன்மை பொருந்திய தருந்தடக்கை முத்தழலோர். இவருடையமனையகத்தின் செல்வமிகுதியால் பெண்கள் வேலையற்று விளையாடித் திரிவார் என்பது திண்ணம். ஆகையால் அக்காலத்தில் விளையாட்டுக் கருவிகளாகிய, கழல், பந்து, அம்மானை முதலிய ஆட்டங்கள் நிகழும் அன்றே? செல்வத்தால் உண்டா சந்தோஷ விளையாட்டுக்களில் ஆடும்அப்பெண்களின் குணம் எவ்வாறு இருக்கும் என்பதை ஆராய்வோம். செல்வர்கள் பெரும்பாலும் கடவுளை நினைப்பதில்லை.

> "செல்வம்வந் துற்ற காலை
> தெய்வமும் சிறிதும் பேணர்
> சொல்வன அறிந்து சொல்லார்
> சுற்றமும் துணையும் நோக்கார்
> வெல்வதே கரும மாக
> வெம்பகை வலிதென் றெண்ணர்."

என்று ஆன்றோர் கூறியவாறு சன்மார்க்கத்தைவிட்டு இச்செல்வ ஸ்திரீகள் இருந்தாரோ எனின் சற்றும் இல்லை. தம்மைமறந்து ஆடும் இவ்விளையாட்டுக்களிலும் சிவபெருமான் திருப்புகழ்பாடுவதே தொழிலாயிருந்தது என்று காட்ட, "அம் மனைகள்தோறும் இறைவனது தன்மைபாடி" என, கரிய விசாலமான கண்களையுடைய பெண்கள் கழல் பந்து அம்மானை ஆடுங் காலத்திலும் இறைவன்தன்மையைப் புகழும் பாட்டுக்களை ஓயாமல் பாடியிருப்பார் இச்சீர்காழி ஊரார் யாவரும்—என இப்பாசுரம் கூறும்.

அக்காலத்தில் பெண்கள் பெற்ற பயிற்சியானது அப்பர் கூறியவாறு,

> "துஞ்சிருள் காலை மாலை
> தொடர்ச்சியை மறந்திடாதே
> அஞ்செழுத் தோதி னுலும்
> அரனடிக் கன்ப தாகும்."

இது சீர்காழிக்குடிகளான பெண்மக்களின் இலட்சணம். பின்பு, சம்பந்தர்காலமாவது அப்பர்காலமே ஆதலால் சோழ பாண்டிய நாட்டுப் பெண்கல்விநிலைமை இங்குக்கூறுகின்ற விஷயத்திற்குப் புறம்பன்றும். இல்லறத்திலே இனிது வாழும் மாந்தரும் இடும்பாவனம் போன்ற முல்லை குறிஞ்சி நிலங்களில் கடவுள் வழிபாட்டில் ஒரு மனத்தராய் இருந்தது அத்தலப் பதிகத்தால் விளங்கும்.

> மனமார்தரு மடவாரொடு
> மகிழ்மைந்தர்கண் மலர்தூய்த்
> தனமார்தரு சங்கக்கடல்
> வங்கத்திர ளுந்திச்
> சினமார்தரு திறல்வாளெயிற்
> றரக்கன்மிகு குன்றில்
> இனமாதவர் இறைவர்க்கிடம்
> இடும்பாவன மிதுவே."

இவ் வனசஞ்சாரிகள் சாதாரணமான தொழிலாளிகளேயன்றிச்செல்வவந்தர்கள்அல்லர் எனக் குறிப்பிடும் அப்பதிகத்தின் நான்காம் பாசுரம் காண்க.

> "பொழிலார்தரு குலைவாழைகள்
> எழிலார்திகழ் போழ்தில்
> தொழிலான்மிகு தொண்டர்அவர்
> தொழுதாடிய முன்றில்
> குழலார்தரு மலர்மென்முலை
> மடவார்மிகு குன்றில்
> எழிலார்தரு இறைவர்க்கிடம்
> இடும்பாவன மிதுவே."

மருதத்துக்குப் புறம்பாய சிறப்பற்ற இத்திணைகளிலும் அக்காலத்தில் மாதர் இவ்வாறு இருப்பர் எனில்நகரத்து மாதரின் ஏற்றம் சொல்ல வேண்டுமோ? எனவே அக்காலத்தில் பெரு நகரங்களில் ஒன்

திருவீழிமிழலையுள் வசித்த பெண்மணிகள் தங்கள் குழந்தைகளைப் பாராட்டும் லட்சணம் தேவர்களும் கண்டு வியக்கத்தக்கதென்று சம்பந்தர் அத்தலத்திலுள்ள பெருமானைப்பாடியதோர் பாசுரத்தில்காண்க.

"எண்ணிறந்த வமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந் தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரியு நாதன் கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசை கேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்
தோடும் மிழியு மிழலையே"

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து 10-ம் தசகம்

[653-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கூறிய பரந்யாஸத்தை வைணவர்கள் ஆத்ம ஸமர்ப்பணமென்றுகுறிப்பார்கள். இப்பாசுரத்துக்கு உரையிட்டிருப்பதைக்கவனித்தால் பலத்தையும் பகவானுக்கே உரித்தென்றுஸமர்ப்பிக்கிறதாக ஏற்படும். மேலும் தங்கள் ஆத்மாவை அவனின் ஸொத்தென்றும், அவனுக்கேத் திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறதாகவும் விவேகிகள் நினைப்பார்களாதலின் அதுவே ஆத்ம ஸ்வரூப ஸமர்ப்பணமுமாகின்றது. ஆகையால் இவ்வுபாயம், முறையே பரஸமர்ப்பணமும் பலஸமர்ப்பணமும் ஆத்மசுவரூப ஸமர்ப்பணமும் ஆவது அறியத்தக்கது.

இவ்வுபாயத்தை அனுட்டானஞ்செய்யுமுன் இத்தபசை முயற்சிக்கிறவன் இருக்கவேண்டிய நோக்கம் எண்ணம் மனோபாவம் மனோநிச்சயம், முதலியவைகளைச் சிந்திக்குமளவில் இவ்வுபாயம் கஷ்டஸாத்தியமானது என்பது புலப்படும். இவ்வுபாயத்தில் தீவிர பக்தியுள்ளவனிருக்கவேண்டிய நிலைமையைச் சற்று விசாரிப்போம். இவ்வுபாயத்தைக் கைப்பற்றி அநுஷ்டிக்க, உலக இன்பங்களில் வைராக்கியமும் ஜிதேந்திரியத்துவமும் அவசியமென்று முன்பே குறித்தோம். அநுஷ்டானத்தின் பின்னரும் இவ்வதிகாரி இவைகளைத் தொடர்ந்து அநுஸரிக்கவேண்டும். எக்காலத்தும் பகவானின் குணநிசயத்தில் தோய்ந்து அவனிடம் உள்ள பக்தியை விசிதமாக்கி அவனைக் கண்டதுபோல ஞானமும் பக்தியும் நாளுக்கு நாள் விருத்தியடையவேண்டும். "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்பதால் திருவாய்மொழியின் காலக்ஷேபத்திலே ஆழ்ந்து பகவானது குணானுபவத்தை அவனது இன்னருளால் பெறவேண்டும். ஆழ்வார் மற்றொருஇடத்தில் இவற்றின் நோக்கமாக, அவனிடத்தில் காதல் கரைபுரண்டுவழியவேண்டுமென்பதைக் காட்ட "காதல் கடல்புரைய விளைவித்தகாரமர்மேனி நங் கண்ணன்" என்றார். அவனிடத்தில் தம்காதல்அவனது ஸங்கல்பஞானத்தைக்காட்டிலும் பெரியதாய் விட்டது என்று அதிசயோக்தியால் கூறவும் ஆழ்வார் துணிந்தனர். எல்லாச்சிருஷ்டிகளிலும் வியாபித்திருப்பதான "சுடர்ஞான இன்பம்" எல்லா எல்லையுங் கடந்துவிட்டது அல்லவோ. (10-ம் திருவாய்மொழி 10-ம் தசகம் 10-ம் பாட்டு) [அதாவது:—சுடர்-பிரபா-கதிர் ரூபமான,ஞானம்-தர்மபூத ஞானமென்ன, ஆனந்தம் - ஆநந்த ரூபமான ஞானமென்ன, இவைகளோடு ஒத்துச் சென்று சரியாவென்று மாத்திரம் சொல்லமாட்டாதவராய் இதிலும் பெரியது தன் அவாஎன்றார்.] இந்நிஷ்டைசலிக்காத மனோநிச்சயத்திலூன்றிக்கிடப்பதால் புருஷன் ஆயஸுவரை நீடித்துள்ள யாகமென்று தைத்தரியஉபநிஷத்துக் கோஷிக்கிறது. தவம்நீடித்திருக்க, பக்தர் மனதில், பகவானிடத்தில் அந்தரங்கமான நற்சிந்தையும் காதலும் இவற்றாலுண்டாகும் சாந்தியும் ஆயுள் முடியும்வரையில் தொடர்ந்து அநுஸரித்தல் வேண்டுமென்று உரைக்க அவசியமில்லை.

பரிசுத்தாத்ம ஸ்வரூபம் கைகூடவேண்டுமென்று தவமியற்றுவார்களும் பத்தியோக்கவடுகளிலொன்றைகைப்பற்றி முயல்பவர்களும் பகவத்கீதையில் முறையே ஆறுமத்தியாயத்திறுதியிலும் 18-ம்அத்தியாயத்திறுதியிலும், பகவானிடத்தில் சரணாகதிசெய்து கொண்டாலன்றிஅவரவர்இயற்றும் தவங்கள் கடுகப்பயனுதவாதென்று பகவானே அறுதியிட்டிருப்பது நினைக்கத்தக்கது. இப்படி அனுஷ்டிக்கும் சரணாகதி அவ்வந்தப் பலத்துக்கு மாத்திரம் உதவுமானதால் அவைகளுக்கு அங்கபிரபத்தி யென்றுபெயர். ஆத்மரக்ஷாந்யாஸம் இப்படிக்கல்லாமல் மோக்ஷ பலத்திலேயே இலக்காய் விதித்திருக்கிறபடியால், ஸ்வதந்த்ர பிரபத்திஎன்று பெயர்பெற்றிருக்கிறது. "இது பக்தியங்கமல்லாமல் ஸ்வதந்த்ரோபாய மென்கைக்காக (திரு 1-10-5) "சரணமாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" (மோக்கஉபாய மகப்பட எல்லாச் சரணமுமென்று அந்வயிக்கவும்) என்று பிராப்தி பரியந்தமாக முடிய நடத்துமென்றருளிசெய்தார். பேராசிரியர் நம்பிள்ளை யுரையாகிய ஈடு மஹாப்பிரவேசத்தல் பட்டோலை செய்திருப்பதைக் கண்டுகொள்க.

வேறொரு விஷயம் இங்கே குறிக்கத்தக்க துளது. அதாவது சிலவைணவர்கள் இப்பரந்யாயஸ உபாயத்தைஒப்புக்கொள்வதில்லையென்று உலாவும்வதந்தி அடியற்றது. ஏனெனில் நம்மாழ்வாரை எல்லா வைணவர்களும் "பிரபந்நஜந கூடஸ்த"ரென்று இன்றைக்கும்நாளைக்கும் வழிபடுகிறார்கள். "கூடஸ்தர்" என்றால் "தலைவர்" "மார்க்க தரிசி" என்று பொருள். ஈட்டு உரையில்இவ்வண்ணமே திருவாய்மொழிக்குத் தலைக்கட்டிருப்பதை நோக்குக. தத்காலத்தில் கீதையில் பிரஸ்தாபித்துள்ளபக்தியோகத்தைஅனுஷ்டிப்பவர்கிடையாது.நம்மாழ்வார்காலத்திலேயே இப்பக்தியோகஅநுஷ்டாநம் நடைபெற்றதாகத் தெளிவில்லை. இப்போழ்து நடைபெறும் "பக்தி" "பக்தர்" என்னும் சொற்கள் சாதாரணமாய் நேசம்கலந்த அடக்கமும் நெறியையுமே உணர்த்தும். இதற்கு, நம்பெரியோர்களும் முன்னோர்களும் "அவர பக்தி" என்று பெயரிட்டழைப்பார்கள்; "அவர" என்றால் "தாழ்ந்த" என்று பொருள்.

இப்போது, வைணவர்க்குள் மோக்கஉபாயம் பிரசாரத்தில் நடைபெறுவது ஆத்மரக்ஷா பரந்யாஸமொன்றே.இந்தஉபாய மநுட்டாநம்செய்பவருக்கே "பிரபன்னன்" - (பகவானை அடைந்தவன்) என்று பெயரிட்டுக்கொள்ளுதல் தகவும் நியாயமும் கிரமமுமாகும். இவ்வநுட்டத்தானத்தை மேற்கொள்ளாமல்கிரமமாய்க் கர்மானுஷ்டானங்களைநடத்திக்கொண்டு வருகின்ற சிலர், அறிவாளிகளாயிருந்தும் இவ்வுண்மையை மறந்து, தங்களைப் 'பிரபன்னர்' என்று பெயரிட்டழைக்கச் சம்மதிக்கிறார்கள். இது தவறு. இலபக்தர்கள் இந்யாஸஉபாயம், முன்யாமெடுத்தெழுதிய வெகு காரணங்களால் கஷ்டஸாத்தியமென்றும்தங்களுக்குஒக்காதென்றும்மதித்துஇதனைமேற்கொள்ளாமல் வாளாவிருக்கலாம். இருந்தும்தன்னை, "பிரபந்நன்" என்று அறியாமைபற்றித் தன்னையே ஏமாற்றிக்கொள்ளுதல்கூடாது. சம்பிரதாயத்தில் இவ்விஷயங்களை எவ்வண்ணம் தேறியிருக்கிறார்களென்பதைப் பராமர்சிப்போம். சிலாக்கியமாய உபாதேய

மென்று எல்லோரும் நன்குமதிக்கும் உரையாகிய "ஈடு" மஹாப்பிரவேசத்தில், இவ்வுபாயம் "அதிகாரியைப்பெற்றாலும்,உபாயம்ஸித்தமானாலும் ஸ்வீகாரமில்லாதபோது உஜ்ஜீவிக்க ஆகைமையாலேஅந்தஸ்வீகாரவேஷத்தைச் சரணாகக்கொண்டென்றும் இதினுடையஸாங்க அநுஷ்டாநவேளையிலே அடிக்கீழ் அமர்ந்துபுகுந்தேன்" என்றுமருளிச்செய்தார். பகவானைத் திருமாலை இவ்வுபாயத்தில் வரிப்பதும் மனோபாவந்தானே; இம்மனோபாவம் மனதின் ஒருசார்பில் ஒதுங்கியிருந்தால் அமையாதோவென்று கட்சிகூறலாம். திருமால் தம்மிடத்தில்அடைவித்துக்கொள்ள ஒரு உபாயம் செய்தே நம்மாழ்வாரும்அப்பேறடையவேண்டுமென்றால், "நோலாது" ஆற்றியிருப்பவரை எங்ஙனம் தன்பக்கல் ஒதுக்கிப் பிரபந்நன் ஆக்குவான்?மனோபாவம்தெளிந்து ஊர்ஜிதப்பட்டு ஆற்றாமை தூண்டவாய்வெளி இச்சரணமாக அவனைக்கூப்பிட்டுஅழைத்து, சாஸ்திர மறுதியிடும் வகையில் இலக்குமியின் புருஷாகாரமான முதற்பொருளையும் ஈட்டி வேண்டியடைதலாகநியமிக்கப்பட்டிருக்கின்ற ஒரு பொருளை ஈஷத்துமாத்திரம் ஏகதேசம் நினைப்பதால் ஸாதிக்க வல்லதாகுமோ? இத்தத்துவத்தை, மனிதரின்மனதை ஆழ்ந்து சோதித்துள Shakespeare என்னும் ஆங்கிலேய கவி " Words without thoughts seldom to Heaven go" என்றனர். "சாதாரணமாகப் பக்தர்கள் இத்தர்மத்தை அனுஷ்டிக்கின்றபோது இதிலுள்ள ஸகல கவடுகளையும் அவைகளின் மனோபாவங்களையும் நன்றாக உணருகின்றார்களோ, அவர்களைப்போல எங்களையும் கணக்கிடக்கூடாதா' வென்று மேல்செப்பிய போலிப்பிரபந்நர்கள் ஆக்ஷேபிக்கலாம். திருமாலையே சரணவரணம் செய்வதாலும், ஆசானது உதவிகொண்டு அனுஷ்டிப்பதாலும் அவரின் உணர்ச்சி குறைவுள்ளதாயிருந்தாலும் கரைகடந்த காருணியக்கடலானபகவான், இலக்குமிபிராட்டியின் பிரஸாதத்தை ஏற்கனவே கோரிப் பெற்றிருக்கும்மேல்கண்டதபஸியர்களின் இலக்கணமுறையின் தவறுகளைக் கண்ணோட்டம் செய்வானென்று யாம் சாஸ்திரத்தை மறுமொழியாக இங்கு எடுத்து உரைப்போம்.

முடிவு:-இவ்வளவும் சற்று விஸ்தாரமாய்க் குறித்திருப்பதெல்லாம், இத் திருவாய்மொழியின் உட்கருத்தை விளக்கும் நிமித்தங்கொண்டாயினும், எவரும் அனுஷ்டிக்கக்கூடிய இம்மோக்க ஸாதநம் அழியாத தர்மத்தில் நிலைபெற்றிருப்பதால், ஆஸ்திகராயிருப்பவர் அநேகர்அதனை அநுஸரிக்க விரும்புவார்களென்றஎண்ணத்தினால்தான் எழுதினோம்.பகவானின் திருவடிகளே நம்மாத்மரக்ஷசுமையைஏற்றுக்கொண்டதென்றுநம்மனம் திருடமாய்த்துணிவது ஏற்றமான புருஷார்த்தமன்றோ? இதனிலும் சீரிய துண்டோ! உண்மையான தத்துவத்தை அறிய விரும்புவோர் இத்துடன் நிற்காமல் தைத்தரிய உபநிஷத்து, கடைசியில் இந்த உபாயத்தை ஆத்மாவாகிற ஹவிஸைப் பகவானுக்கு ஸமர்ப்பிக்கும் யஞ்ஞமாக நிரூபித்துப் பேசுவதைப் படித்தால் யாம் எழுதியதைச் சுலபமாய் நினைக்க நேரும்.

கலா நிலயம்

முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன
உடனே பெற்றுக்கொள்வது நலம்.

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்தியவை கிடைக்கும்.

பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ.	7	8	0
ஆப்லெதர் கில்ட் பைண்ட்	"	9	0	0
ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது		10	0	0

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும். தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
நஞ்சன்கூடு பல்பொடி
கோரோஜனை மாத்திரை
சாதாரணம்-பாக்கெட்
ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் ...]

m21,n28LN
199198

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

ராமாயணம்:—தமிழ் வசனம் வால்மீகி ராமாயணத்துக்குச் சரியானமொழி பெயர்ப்புத்தமிழ் வசனம், கம்ப ராமாயணத்துக்குச் சரியான வசனம் இவ்விரண்டும் தனித்தனியே ஆரால் வெளியிடப்பெற்றவை சிறந்ததென்பதும் விலை விபரமும் எங்குக் கிடைக்குமென்பதும் நன்கு ஆராய்ந்து தெரிந்த அன்பர்களை இக்கலாநிலயம் வாயிலாக எனக்குத் தெரிவிக்கப் பெரிதும் வேண்டுகிறேன்.

அ. முருகப்பன், பள்ளத்தூர்.

* * *

தாய்மொழி மறந்தவர் தற்கொலை :—ஜப்பானிய வைத்தியர் ஒருவர் இளவயதிலேவெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார். அவர் வாழ்நாளில் பெரும் பகுதி வெளிநாடுகளில் கல்விப் பயிற்சிக்காகக் கழிந்தது. டாக்டர் பட்டம் பெற்று ஜப்பான் தேசத்திற்குத் திரும்பினர். அவர் தாய் மொழியான ஜப்பான் பாஷையை முற்றிலும் மறந்துவிட்டார். அதுபற்றித் துக்கமும் வெட்கமும் அடைந்தார். தாய்ப் பாஷையைக் கற்கவும் சில நாட்கள் முயன்றுர். பிறர் கேவலமாகப் பேசுவதை அவரால் பொறுக்கமுடியவில்லை. எனவே, மனம் வருந்தித் தற்கொலை செய்துகொண்டாராம்.

* * *

பத்து வயதில் பூரண மனிதர்:—ஆண் பெண் கலப்பின்றி, இந்திரியத்தைக் கருவிகளின் துணையால் கருப்பையில் பாய்ச்சுவதால் மட்டும் குழந்தைகள் பெறும் முறையை அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கிறுர்கள். இப்பொழுது இன்னும் புதுமையான செய்தி ஒன்று வெளியாயிருக்கின்றது. பிறந்த ஆறு வது மாதத்தில் நடக்கவும் ஐந்து வயதிற்குள் நல்ல திடமுள்ள வாலிபனாகவும் பத்து வயதில் பூரண மனிதன் ஆகவும் கூடிய குழந்தைகளை உற்பத்தி செய்வதைப்பற்றிப் பிலடால்பியா விஞ்ஞான சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து வருகிறுர்களாம். இரண்டே வாரத்தில் பூரண வளர்ச்சியெய்தி ஆடவும் பாடவும் ஓடவும் கூடிய வெள்ளை யெலிகளை இப்பொழுது அவர்கள் தயார் செய்துவிட்டார்களாம்.

* * *

இங்கிலாந்தில் தீர்த்தம்:—இங்கிலாந்தைச் சேர்ந்த டர்ஹாமில்ஒரு ஆச்சரியமான அருவியைக்கண்டுபிடித்திருக்கிறுர். அங்குச் சமீபத்தில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டதால் ஜனங்கள்ஜலத்திற்காக மலைப்பிரதேசங்களில்அலைந்துதிரிந்து புதியஅருவிகள் இருக்கிறதாவென ஆராய்ந்தார்கள். ஓரிடத்தில் ஒரு சிறு கல்லைப் புரட்டியதும் ஒரு அருவியிலிருந்து ஜலம் வேகமாக ஓடிவரக்கண்டு ஜனங்கள் அதிசயித்தார்கள். ஏராளமான ஜனங்கள் பல காலன் தண்ணீர் எடுத்தும், அருவி வற்றுமல் ஓடிக்கொண்டே யிருக்கின்றது. இந்த அருவி ஜலத்தில் ஒரு விசேஷம். எவ்வித வயிற்று நோய் இருந்த போதிலும், இந்த ஜலத்தைச் சாப்பிட்ட சில தினங்களில் நோய் குணமாகிவிடுகிறது. இதைக் கண்ட பல ஜனங்கள் ஜலமெடுத்துப் பல இடங்களுக்கு அனுப்பி வருகிறுர்கள். அதைத் தவிர இன்னம் பல வியாதிகளும் ஆச்சரியமாகக் குணமாவதாகத்தெரிகிறது. இந்த ஜலத்தின் அற்புதசக்தியைக் கண்டு பல டாக்டர்கள் அந்த ஜலத்தைப் பரீட்சித்து வருகிறுர்கள்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஸு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரு. 1

இனம்! “ காம சாஸ்திரம் ” இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)